94

ஜகன்மோகினி

94

ஆசைப்ரவாகம்

வை. மு. கோதைநாயகி அம்மாள்

67 வது நாவல்

"ஆசைப்ரவாகம்" இவ்விதழில் ஆரம்பமாகியுள்ளது. வாசகர்கள் கதைப்பகுதிக்கு அதிகப்பக்கங்கள் அளிக்கும்படி கோருகிருர்கள். மோகினி நவீனத்தை அதிகமாகப் படித்து ... வாசகர் உள்ளத்தில் ஆசைப்ரவாகம்!

...ளை அதிகரித்து இரட்டிப்பான சந்தோஷமளிப்ப ...றிவிப்பை உள்ளேகவனித்து, தங்கள்மேலான ...ஆதரவை-சீக்கிரம் தெரியப்படுத்தவும்.

JC
N45·22·6.
183/02

அணா 4 June 1945

ஆண்டு 22 திங்கள் 6

"JAGANMOHINI." SINGAPERUMALKOIL.

அவனுடைய வெற்றிக்கு இப்போதே திட்டம் போடப் படுகிறது

'அவனுடைய தகப்பனார் அவனுக்குக் கல்வி' நிச்சயமாய்க் கிடைப்பதற்[illegible] ஏற்பாடு செய்கிறார்

அவன் ஒரு சின்ன பையன் தான். ஆனால், அவனுடைய தகப்பனார் அவன் கல்விக்குப் பணச் செலவு ஆகுமென்று எதிர்பார்த்து, அவன் பள்ளிச் சம்பளத்துக்குப் பிடிக்கும் செலவை புத்திசாலித்தனமாய் வட்டிக்குப் போட்டுவைத்திருக்கிறார். அதே தொகை 12 வருஷத்து வட்டியினால் 50 சத வீதம் அதிகமாகிறது. பையன் பெரியவனாகும்போது அந்தத் தொகையைக் கொண்டு அவன் தனது சர்வ கலாசாலைப் படிப்பை முடித்துவிடுவான். எனவே, பூர்த்தியானதும் பயனுடையதுமான கல்வியை ஆதாரமாகக் கொண்டு, அவன் மனோ திடத்தோடும் நம்பிக்கையோடும் உலகத்தில் காலெடுத்து வைக்கலாம்.

அவன் தனது தகப்பனாருக்கு எவ்வளவு கடமைப் பட்டிருக்கவேண்டும்! அதுபோலவே அவனுடைய தகப்பனார் தமது சேமிப்புகளை நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்களில் வட்டிக்குப் [illegible]ட்டுவைக்கத் தாம் செய்து[illegible]ண்ட தீர்மானத்துக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கவேண்டும். அதே மாதிரி நீர் உமது மகனுக்குச் செய்யமுடியுமா? அது உம்மைப் பொறுத்ததாகும்.

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணா, 8 அணா, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜெண்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸ்கள் ஆகிய இந்த இடங்களிலாகிலும் கிடைக்கும்.

அறிவுள்ள தகப்பன்மார்களைப் பின்பற்றி உமது வருமானத்தில் மிச்சம் பிடித்ததை......

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் வட்டிக்குப் போட்டுவைக்கவும்.

★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.

★ தனிவட்டி 4½ சதவீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதுவரையில் சேர்ந்துவந்த வட்டியுடன் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

AAA 124 6

ஜீவிய சந்தா ரூ. 50
வருஷ சந்தா ரூ. 3
தனிப்பிரதி அணா 4

ஜகன்மோகினி

17 JUL 1945

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைச் சார்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. —வீரராகவ கவி

Vol. 22. No. 6. பார்த்திப : வைகாசி June 1945

183102

யுத்தம் முடிந்துவிட்டது !...ஆனால்...

உலக சரித்திரத்திலேயே நிகரற்றதென உலகையே கலக்கிவந்த மகாயுத்தம் ஜர்மன் சரணாகதியுடன் ஓர் மகத்தான முடிவுக்குவந்துவிட்டது. மிகவும் கடினமானது, முக்கியமானது எனக் கருதப்பட்ட ஐரோப்பிய யுத்த அரங்கத்தில் அமைதி ஏற்பட்டுவிட்டது. ஆனால் ?...

பத்திரிகையுலகம் சம்பந்தப்பட்ட வரையில் யுத்தத்திற்கு முன் பிருந்த நிலைமைக்குத் திரும்ப வெகு காலம் பிடிக்கும். ஏனெனில் கீழ்க்கோடி யுத்தம் முடியவேண்டும்; பழையபடி காகித உற்பத்தியும் கப்பல் வசதியும் ஏற்படவேண்டும்.

ஜப்பானிய யுத்தம் தொடங்குவதற்கு முன்பிருந்த நிலைமையைவிட இன்றைய விலைவாசிகள் அதிகமாகவே இருப்பது யாவரும் அறிந்ததுதான். பலவிதத்திலும் சர்க்கார் கட்டுப்பாடுகளிருந்தும், பத்திரிகையுலகம் சம்பந்தப்பட்ட சகலமான பொருள்களும் அதிகமான விலைக்கே கிடைக்கும் காலமாயிருக்கிறது இன்னமும்.

"யுத்தத்திற்கு முன்பிருந்ததுபோல் மோகினி 64 பக்கங்களுடன் வெளிவருவதுதானே ?" என்றும், "முன்போல் ஆர்ட் ராப்பருடன் வெளியிடுவதுதானே ?" என்றும், "கதைப் பகுதியை பழையபடி 32 பக்கங்களாவது வெளியிடுவதுதானே" என்றும், இதுபோல் அவரவர்க்குத் தோன்றியபடி அன்பர்கள் கடிதம் எழுதுகிறார்கள் ; ஆவலுடன் மாறுதலும் எதிர்பார்க்கிறார்கள். சில முக்கியமான விஷயங்களை வாசகர்களின் கவனத்திற்கு—இது சம்பந்தமாக—கொண்டுவரவேண்டியிருக்கிறது.

ஒரு படி அரிசியைக் கொடுத்துவிட்டு, எத்தனைபேருக்கு வேண்டுமானாலும் செலவழித்துக்கொள் என்று சொன்னால், ஒரு படிக்கு மேலான செலவுள்ள குடும்பத்தில் என்ன நடக்கும் ? சற்று யோசித்துப்பாருங்கள். இருப்பதை வைத்துக்கொண்டே, எல்லாருக்கும் ஒருவாறு திருப்தியளிக்கத்தானே முயற்சிப்போம் ? அதேபோல் மோகினிக்கு அளிக்கப்பட்டுள்ள நியூஸ்ப்ரிண்ட் ரேஷன் போதாது. அதனால் அளவையும் மாற்றி, பக்கங்

களையும் குறைத்து—ஆனால் ஒருவிதத்திலும் சுவைகுன்றாது—கொடுக்கப்பட்டுள்ள அளவுக்குள் எப்படியோ சமாளித்து வருவது என்று முடிவு செய்தோம். அவ்வப்போது பலவிடங்களிலிருந்தும் பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்து நாளுக்குநாள் புதிய பெரிய அம்சங்களைச்சேர்த்து, படிப்படியாகப் பக்கங்களை அதிகரித்து வருவதால் பல அன்பர்களுக்குப் பிரதிகள் கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவருகிறது.

நேயர்களின் வேண்டுகோளின்படி அதிகரித்த ரேஷனுக்கும், ஆர்ட்ராப்பர் உபயோகிக்க அனுமதிக்கவும் சர்க்காருக்குப் பல கடிதங்கள் எழுதினோம். ஒன்றுக்காவது அனுகூலமான பதில் இல்லை **இது வரையில்.** *தற்சமயம் ரேஷன் அதிகரிக்க முடியாதென்றும், ஆர்ட்ராப்பர் உபயோகிக்கக்கூடாதென்றும் திரும்பத் திரும்ப ஒரே பதில் வந்துகொண்டிருக்கிறது.*

இந்த நிலைமை இப்படியிருக்க, "எது எப்படி இருந்தாலும் மோகினியை 64 பக்கங்களுடன், அதில் வை. மு. கோ. நாவல் பகுதிமட்டும் 32 பக்கங்களுடனும், இதர அம்சங்கள் 32 பக்கங்களுடனும் வெளியிடவேண்டும்" என்ற வேண்டுகோள் தினே தினே அதிகரித்துக்கொண்டே வருகிறது. கதைப் பகுதிக்கு முன்போல் இடம் அளிக்காதிருப்பதைப் பற்றி வாசகர்கள் குறை கூறுவது இயற்கையே! அதிலுள்ள விசேஷப் பற்றுதலையே அது காட்டுகிறது. இவ்வாறு வெளியிடுவதாயின் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. முக்கியமானது, பல வாசகர்களுக்கு மோகினி கிடைக்காமற் போய்விடும். அத்தகையவர்களுக்கு நாவல் பகுதி 32 பக்கங்களை மட்டுமாவது நியூஸ் ப்ரிண்ட் அல்லாத் வேறு தாளில் அச்சிட்டு கிடைக்கும்படிச் செய்தால்தான் த்ருப்தி ஏற்படும். அன்ப்ளீச்ட் காகிதம் முதற்கொண்டு எந்த காகிதமும் நியூஸ்பிரிண்டைவிட விலை அதிகம் என்பது எல்லோரும் அறிந்ததே.

தற்போதுள்ள விலைவாசிகளின்படி நமது புத்தகங்களுக்கு 100-பக்கங்களுக்கு சுமார் ரூ 1/- என்று விலையிட்டுவருகிறோம். மிகவும் உயர்ந்த காகிதமானால், 112 அல்லது 120 பக்கங்களுக்கு ரூ. 1—8—0 விலையிட வேண்டியிருக்கிறது. மேற்கூறிய விலைப்படி கதைப்பகுதியை—32 பக்கங்கள் கொண்ட பகுதியை—6 அணாவுக்குக் குறைந்து கொடுப்பதற்கு இயலாது. மோகினி இதழும் அதே 6 அணாவுக்குத்தான் விற்கவேண்டி வரும். ஏனெனில் தற்போது வெளிவருவதைப்போல் இருமடங்கு கதைப் பகுதியும், அதிகரித்த பக்கங்களும் வெளியிடுவதனால் நமது வருமானம் குறையாது பார்த்துக்கொள்ளவேண்டுமல்லவா? இதர பத்திரிகைகளைப் போல் மோகினி விளம்பர வருமானத்தைக் கோருவதே இல்லை. ஆகையால் வாசகர்களுக்கு இரட்டிப்பான மகிழ்ச்சியையளிக்க முன்வருவதற்குத் தகுந்தபடி விலையை சற்று அதிகமாக்கும்படி நேரிடுவது நியாயந்தானே?

இது சம்பந்தமாக நீங்கள் கவனிக்கவேண்டியது யாதெனில்,—64 பக்கங்களுடன் 2 அணாவிற்கு மோகினி விற்கப்பட்ட காலத்தில் நியூஸ்ப்ரிண்ட் ராத்தல் 0—1—4க்கு விற்கப்பட்டது: இப்போது சர்க்கார் நிர்ணயித்துள்ள விலையே 6 அணா. அதேபோல் கலர் மைகள், ப்ளாக்குகள் சகலமும் சுமார் நான்கு மடங்கிலிருந்து

சுத்தானந்த பாரதி

புதுமை வேண்டும்

வெள்ளைக்காரக் கவிகள் நீண்ட காலம் கிரீக்கு, லத்தீன் பாணியிலேயே பாடி வந்தனர். ஓமரும், தாந்தேயும், விர்ஜிலுமே அவர்களை ஆண்டனர். இலத்தீன் யாப்பிலக்கணத்தை அப்படியே பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் கைப்பற்றினர்- கதைகள் எண்ணங்கள், ஐதிகங்கள்கூட கிரீக் குலத்தின் மயமே. உதாரணமாக ஷேக்ஸ்பியரின் நாடகக் கதைகளெல்லாம் புளுடார்க் முதலியோர் எழுதிய பழைய கதைகளே. கொர்நெலின் நாடகங்களெல்லாம் இத்தாலிய வீரர் கதைகளே. ராஸீனின் இனிய நாடகங்கள் கிரேக் இலக்கியக்கதைகளே. மில்தனின் "விண்—இழப்பு" என்ற காவியம் தாந்தேயின் திருக்காட்சியைத் தழுவியதே. மில்தன் கவிகளெல்லாம் லத்தீன் அச்சில் வார்க்கப்பெற்றவை. இந்தப் பழைய கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து புதிய பொருளும் புதுமையுணர்ச்சியுங் கொண்டு கவி புனைய முனைந்தவர் ஷெல்லி, பைரான், கீட்ஸ் பிரான்ஸிஸ் தாம்ஸன் முதலியோர். இவர்கள்கூட எதுகைமோனைகளுக்குக் கட்டுப்பட்டிருந்தனர். பிரான்ஸில் மாலார்மே என்ற கவியும், அமெரிக்காவில் வால்ட் விட்மனும் பழைய கட்டுப்பாடுகளை அடியோடொழித்தனர். யாப்பிலக்கணத்தை ஒதுக்கித் தள்ளினர். புதிய வசனக் காவியந் தொடுத்தனர். வீட்மனின் வரலாறும் திருவாக்கும் அன்பு மலராக வந்திருக்கின்றன; தாந்தே, ராஸீன் முதலியோர் வரலாறும் அவ்

எட்டு பங்குவரை யுள்ளன. இதையெல்லாம் கவனித்தால் மோகினியை 6 அணுவுக்கு விற்கவேண்டிய அவசியம் தெளிவாகப் புலப்படும்.

எனினும், வாசகர்களின் அபிப்பிராயத்தை அறிந்தே பிறகு பக்கங்களை அதிகப்படுத்தி, கதைப் பகுதியை இரட்டிப்பாக்கி, விலையிலும் சிறிது அளவு அதிகப்படுத்தி, மோகினி கிடைக்காதவர்களுக்கு அதே விலையில் கதைப் பகுதி மட்டும் கிடைக்கும்படிச் செய்வதென்று தீர்மானித்து, ஒருமாத அவகாசம் அளிக்கிறோம். தயவுசெய்து தங்கள் மேலான அபிப்பிராயத்தை—ஆதரவை—சீக்கிரமே தெரியப்படுத்தும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

எந்த மாறுதல் செய்வதாயிருந்தாலும் ஆகஸ்ட் (ஆடி) இதழிலிருந்துதான் செய்வதாக உத்தேசம். அதற்குள் ஒருவேளை சர்க்காரும் கொஞ்சம் கிருபை செய்யலாமில்லவா? அதிகப்படியான ரேஷன் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் மேலே குறிப்பிட்ட விதத்தில் வாசகர்களைத் திருப்திசெய்ய முடியுமென்றே எண்ணுகிறோம்.

மற்றபடி அடுத்த இதழில்

—வை. மு. ஸ்ரீ

வாறே வந்துள்ளன. படித்துப் பாருங்கள். விட்மனின் கவியைச் "சாக்கடைக் கவி" என்று அந்தக் காலம் பழம் பண்டிதர் இகழ்ந்தனர், ஏழை விட்மன் ஒரு கச்சேரியில் வேலைக்கமர்ந்தான், ஒரு வாரம் வேலை நடந்தது; ஒரு நாள் விட்மன் மேஜையில் "Leaves of Grass" என்ற அவனது நூல் இருந்தது; கச்சேரித்தலைவர் "இந்தச் சாக்கடை நூலை ஏன் வாங்கினாய், படித்தாய்?" என்று சினந்தார்.

"இதை எழுதினவன் முன்னே தான் தாங்கள் இப்போது பேசுகிறீர்கள்" என்றான் விட்மன். "நீ தானா அந்தச் சாக்கடைக்கவி; போ வெளியே" என்று பிடித்துத் தள்ளினான் அதிகாரச்செருக்கன். விட்மன் சாதுவாகச் சென்று "அந்தராத்மாவே! உலகின் புயலுக்கு அஞ்சாதே; உன்னை அறியும் காலம் வரும்" என்று பாடினான். இங்கிலாந்தில் ஒரு பெண்மணி விட்மன் கவியை வியந்து நாடறியச் செய்தாள். இவ்வாறே புதிய முயற்சிக்கெல்லாம் தடைகள் வருவதுண்டு. மனிதன் பழமைக்கு அடிமையாவதே இதன் காரணம்.

ஆனால் புது முயற்சிகளை ஒருக்காலும் யாராலும் தடுக்கமுடியாது. ஐப்பசி கார்த்திகை மாதங்களில் காவேரியில் வரும் புதிய வெள்ளத்தை யாரால் தடுக்கமுடியும்? வங்காளத்தில் தாகூரும், தமிழகத்தில் கவிக்குயில் பாரதியாரும் புதுமைக்கவிகள்; இவர்களைச் சுற்றிய பண்டிதப்புயல் இப்போது அடங்கிப்போனது.

இந்தக் காலம் சுதந்தர உணர்ச்சி மிகுந்த காலம். ஆண் பெண் சரி நிகர்சமானமாகப் பழகும் சமத்துவக் காலம். சாதிமத வேறுபாடுகளையெல்லாம் எடுத்தெறிந்து, மனித ஜாதி ஒன்றுசேருங் காலம், காலத்திற்குதவாத பழங்குப்பைகளை உரமிட்டுப் புதிய பயிர் வளர்க்குங் காலம், இக்காலம் பழைய மாமூல்களிலேயே அழுத்தம் செய்ய முடியாது.

காலம் பலதுறைகளில் முன்னேறுகிறது. இன்று நாம்முன்னேறக் கவி பாடுவோம். காலம் பழைய இலக்கணக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து விட்டது. நன்னூலில் ஒருவரிகூடப் படிக்காதவர்கள், வெகு அழகான கட்டுரைகளும் கதைகளும் எழுதுகிறார்கள். ஆண்கள்மட்டுமல்ல; பெண்கள் இயற்கையாகச் சலசலத்தோடும் அருவி போலவும், மலர்களைக் கொஞ்சி வரும் தென்றல் போலவும் இனிய தமிழ் எழுதுகிறார்கள். உணர்ச்சி ததும்ப எழுதுகிறார்கள். ஆண் எழுத்தாளர்களுக்குப் பெண் எழுத்தாளர் இம்மிகூடக் குறையவில்லை; சிலசமயம் உணர்ச்சி வேகம் பெண்களுக்கு அதிகமாகவேயிருக்கிறது. தமிழ் ஒரு புதிய சோபையும், இயற்கையான கட்டுக் கோப்பும் அடைந்து சுதந்தரமாகவளர்ந்து வருகிறது. இப்போதுள்ள புதிய இளந் தமிழே இனிவருந்தமிழ். பழைய சந்திஇலக்கணம் இனிச் செல்லாக் காசுதான்.

ஸ்ரீ வா. வெ. சு. ஐயர் புதுச்சேரியில் கம்பராமாயணம் ஆராய்ந்து கொண்டிருந்தார். ஒரு பண்டிதர் பாடல்களைப் பதம்பிரித்துப் பொருள் சொல்லிக் கொண்டிருந்தார்.

புதுப்புனல் குடையமாதர்
பூவொடு காவி பூத்த
கதுப்புறு வெறியே நாறுங்
கருங் கடற்றரங்க மென்றான்

என்ற பாட்டு நடந்தபோது சுப்பிரமணியபாரதி வந்து பக்கத்தில் உட்கார்ந்து, "ஐயரே, கம்பனை... எங்கே

பார்ப்போம்" என்று புத்தகத்தைப் பறித்துப் பாட்டைப் படித்தார்.

பண்டிதர்:—உம்மைப் புகழ் பெற்ற கவிஞர் என்று பல்லோர் வாயிலாகக் கேட்டிருக்கிறோம்; இச் செய்யுளுக்கு நீவிர் பொருள் சொல்லுவீரோ?

பாரதியார் பாட்டைப் பார்த்தார்...."கம்பன் நமக்காகப் பாடவில்லை.—அவன் ஆகாசத்திலிருந்து பாடுகிறான். புதுப்புனல் குடைய என்பது புதுப்புனல் ஆட என்றிருந்தால் எளிதாகப் புரியுமே. பழைய நடை காதைக் குடைகிறதே" என்றார் பாரதியார்.

பண்டிதர்:—உமக்குப் பழைய நூல்களில் ஏதாவது பழக்கம் உண்டா? நன்னூல் தெரியுமா? சிலப்பதிகாரம் தெரியுமா?

பாரதி:—ஓய், ஓய்! பழம் பண்டிதரே. அந்தப் பழைய கறையான்களுக்கெல்லாம் கோடுகிழித்து விட்டோமையா; நமக்கு இப்போது வேண்டுவது நாட்டுரிமை, பெண்ணுரிமை, அடிமை நிலை மாறிய சுதந்திரம்; இதற்கே நாம் பாடுபடுகிறோம். இப்போது படிக்கிறீர்களே நாட்டுப் படலம்; இதைத் தெருவில் போகிற காத்தானுக்குப் படித்தால் தேச பக்தி உண்டாகுமா? அவனுக்கு விஷயமே புரியாதே. நமக்குக்கூடப் பண்டிதர் சொன்னாலே புரியும்.

பண்டிதர்:—இதைவிட உணர்ச்சியுடன் நீர் நாட்டுப்படலம் பாடமுடியுமா?

பாரதியார்: ஹாஉம் என்றார். எழுந்து நின்றார். காலை முன்னே வைத்தார். கையை ஓங்கி முன்னால் குத்தினார். வலக்கையை மார்பில் வைத்தார்.

பாருக்குள்ளே நல்ல நாடு
எங்கள்
பாரத நாடு

என்று வீராவேசமாகப் பாடத் தொடங்கினார்.

பண்டிதர்:—பாமரர்களுக்கு இந்த இசைப் பாட்டு நன்றே; உம்மை மறுமுறை கடாவுகிறோம்.

பாரதி:—சை. கேட்கிறோம் என்னும்.

பண்டிதர்:—சரி கேட்கிறோம், கம்பனைப்போல் கவிநயத்துடன் நீர் ஒரு காவியம் செய்வீரா?

பாரதியார்:—செய்வோம், செய்வோம், செய்வோம் என்று எழுந்து ஓடிப்போனார்,

உடனே வீட்டிற்குச் சென்று "பாஞ்சாலி சபதம்" எழுதத் தொடங்கினார். பாரதியார் சிறு வயதில் பரமேச்வரையர் நடித்த பாஞ்சாலி சபதத்தைப் பார்த்திருந்தார். அதுதான் அவரது பெண்ணுரிமை உணர்ச்சியை ஊக்கியது. அத்துடன் வியாச பாரத மொழிபெயர்ப்பையும் படித்து, வியாசரின் உபமானங்களையே வைத்துப் பாஞ்சாலி சபதம் எழுதினர் பாரதியார்.

தெளிவுறவே அறிந்திடுதல்;
தெளிவுதர மொழிந்திடுதல்
சிந்திப்பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக்
கனவு பல காட்டல்"

இவையே பாரதி பாட்டின் இலக்கணம்,...புதுயுகக் கவிகளின் இலக்கணமும் இதுவே. நீட்டிவளைக்கும் கற்பனைகளும், தூக்கஞ் சுழற்றும் வர்ணனைகளும் இக்காலம் பயனில்லை; காலம் ஓடுகிறது; வேலை பெருகிவிட்டது: வாழ்வின் தேவைகள் பெருகிவிட்டன. இக்காலம் சுருக்கம், விளக்கம், நேர்மை, தெளிவு, எளிமை இனிமை—இவை சேர்ந்த கவிதைகளே வேண்டும். அகராதி பாராமல், புலவர்களைத் தேடாமல் படித்ததும் பொருளை உணர்ந்து கவியுள்ளத்துடன் ஐக்கிய

ஸ்ரீமான். பி. ஸ்ரீ.

சைவ வைஷ்ணவ சமரஸம்

"என்ன, ஓயாத போரும் பூசலு மாக இருக்கிறது? பகிரங்கமான பகைமை தொலைந்தாலும் இன்னும் எத்தனையோ ரகஸ்யப் பகைவர்கள்! பகிரங்கமான யுத்தம் ஓயத் தொடங்கினாலும் சூக்ஷ்மமான போர்கள், போட்டிகள், பூசல்கள், பொறாமைகள்! வாழ்க்கையே இப்படிப்பட்ட ஒரு போராட்டம் தானா? இந்த இருளுக்கு விடிவே கிடையாதா?" என்றெல்லாம் உள்ளம் கதறும்போது, ஒரு ஜைன கவிக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

இருளே உலகத்(து)
    இயற்கை; இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற
    அறிவுடைமை, கைவிளக்கின்
நெய்யேதன் நெஞ்சத்(து)
    அருளுடைமை, நெய்பயந்த
பால்போல ஒழுக்கத்
    தவரே, பரிவிலா
மேலுலகம் எய்துபவர்.

[பயந்த—பெற்ற; கொடுத்த. பரிவு—துன்பம். எய்துபவர்—அடைபவர்.]

"இருள், உலகத்து இயற்கை தான்; என்றாலும் அந்த இருளை ஓட்டும் கைவிளக்கை நாம் பெற்றுக் கொள்வதற்கும் இயற்கை வழி காட்டுகிறது" என்று சொல்லும் புலவர், நமது கல்வி அறிவே அந்தக் கைவிளக்கு என்கிறார். காரிருளில் ஒரு சிறு கைவிளக்கைப்போன்றது தான் நாம் கற்ற கல்வி. கற்றுக் கொண்டேயிருக்கும் கல்வியும் அது தான். எனினும் இந்தக் கைவிளக்கும் அணைந்துபோனால் இந்த மையிருட்டிலே நம்முடைய கதி தான் என்ன? ஆகவே கைவிளக்கை ஜாக்கிரதையாகப் போற்றவேண்டும்.

ஆனால் உண்மையான கல்வி அறிவிற்கு மூளைமட்டும் பண்பட்டால் போதாது, நெஞ்சும் பண்படவேண்டும்; எனவே நெஞ்சிலுள்ள அருளே இந்தக் கைவிளக்கை விளங்கி எரியச் செய்யும் நெய் என்கிறார் புலவர். அஹிம்ஸா தர்மம் என்ற இந்த நெய்யைத் தரும் பால்தான் ஒழுக்கம் என்றும் சொல்லி, நமது பொது ஒழுக்கத்தின் ஸாரமாக அஹிம்ஸா தர்ம உணர்வு விளையவேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறார். அப்போதுதான் துன்பமில்லாத மேல்-உலகத்தைத் தரக்கூடிய ஞானமாக ஒளிருமாம் உலக இருளை ஓட்டும் கைவிளக்காகிய கல்வி அறிவு.

இது ஜைன பௌத்தக் கொள்கைகளின் ஸாரம் என்று கருதத்தக்கது. இக் கொள்கையில் அஹிம்ஸா தர்மம் என்ற அருள்-நெறிக்கு முக்கிய ஸ்தானம் இருக்கிறது; ஆனால் கடவுளுக்காவது கடவுளின் அருள்-நெறிக்காவது இடம் எங்கே? தர்மத்தைப் பேசும் ஜைன பௌத்த சமயங்கள் தர்மச்சுடராகிய கடவுளைக் குறித்து மௌனம் சாதிக்

மாகக் கூடிய கவிதைகளே இப்போது வேண்டும். நாதமுனிகள் ஆழ்வார்களின் பாசுரம் எல்லாருக்கும் விளங்கும்படி பதம்பிரித்து கரடுமுரடுகளை நீக்கி எழுதி வெளியிட்டார். ஒரு பாசுரத்தைக் கேளுங்கள்.

பொன்முடிசும் போரேற்றை
    எம்மானை நால் தடந்தோள்
தன்முடிவொன் றில்லாத
    தண் துழாய் மாலையனை
என்முடிவு காணாதே
    என்னுள் கலந்தானை
சொல் முடிவுகாணேன் நான்
    சொல்லுவது என் சொல்லீரே

கின்றன. 'தேவாதிதேவன்' என்று ஜைனர்கள் போற்றுவதும் அஹிம்ஸா தர்மத்தால் துன்பம் தொலைத்துப் பூர்ண இன்பம் பெற்ற ஒரு ஜீவனைத் தான்! பௌத்தர்களும் ஜீவ காருண்ய மூர்த்தியான புத்தர் பெருமானையே இறைவனாகப் போற்றுகிறார்கள்.

புத்தரோ, பிரம்மத்தைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் வாதிப்பதைக் கண்டித்து, "நல்லதைச் செய், நல்லவனாயிரு" என்று உபதேசித்தார்.

*   *   *

உலக இருளில் வழிதெரியாமல் ஹிருதயம் அலறும்போது, வானத்தை நோக்கி "ஒளி காட்டு, வழிகாட்டு" என்று பிரார்த்தனை செய்வதற்கும் உரிமை கிடையாது,—தெய்வத்தை மறந்த நாஸ்திக சமயங்களிலே. பிராணி-உலகத்தில் மனிதன் ஒருவன்தான் நிமிர்ந்து ஆகாசத்தை நோக்குகிறான், அழுகிறான்; தொழுகிறான். "அழாதே, தொழாதே; அதற்குக் காது கேளாது!" என்று ஆறுதல் சொல்லுகின்றன நாஸ்திக சமயங்கள். நல்ல ஆறுதல்!

அம்பலமாவது ஆகாசம்,
உற்றுப் பாரு;
அருளில்லை, பொருளில்லை,
கண்டு தேறு!

[தேறு—தெளிவு அடைவாய்.]

என்று நாஸ்திகர்கள் சொல்ல, நாம் தெளிவு அடைவதுதான் எப்படியோ? "இல்லை, இல்லை' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதியிருக்கிறது ஆகாசத்தில்—என்கிறார்களே, அந்த லிபியை எப்படித்தான் வாசிக்கத் தெரிந்ததோ அவர்களுக்கு?

உண்மையில், அங்கே அருள் இல்லை என்றால் இங்கே அருள் என்ற அஹிம்ஸை இருப்பது எப்படி? இருப்பதால்தான் என்ன பயன்? எனவே,

அலப்பாய் ஆகாசத்தை நோக்கி
அழுவன், தொழுவனே!

[அலப்பாய்—மனக்கலக்கமாய்]

என்று சொல்லும் நம்மாழ்வார் அந்த ஆகாசத்திலேயே அருளும் பொருளும் கண்டு,

கருவாகிய கண்ணனைக்
கண்டுகொண் டேனே!

என்கிறார்.

நன்னெஞ்சே! நம்பெருமான்
நமக்கருள்தான் செய்வானே!

என்று உறுதி கூறுகிறார்.

சிவநேசரான சித்தர் ஒருவரும் ஆகாசத்தை நோக்கி,

தூக்கிய பாதம்கண்டோம்!
ஜோதி கண்டோம்!
சுத்தவெளிக்(கு) உள்ளேஒரு
கூத்தும் கண்டோம்!

என்று குதூகலப்படுகிறார். வானம் வெறும் பாழான வானமாய் முடிவில் ஒரு சூன்யமாய்த் தோன்றவில்லை இவருக்கு. ஆகாசத் திரை விலக ஓர் அற்புதக் கூத்தை, ஆனந்தக் கூத்தைப் பார்க்கிறார். உலகத்திற்கு அருள் செய்யத் தூக்கிய பாதம்—ஆடும் திருவடி—மெல்லத் தோன்றுகிறதாம். அப்பால் ஒரே ஜோதி; வடிவம் நன்றாய்த் தெரியவில்லை. எனினும் அந்த ஆட்டம், அருள்—ஆட்டம் என்று தெரிந்து விட்டது. பொருளற்ற பேயாட்டம் அன்று; ராக தாளங்களுக்கு இசைய நடை பெறும் நடனம்—என்று தெரிந்து விட்டது.

*   *   *   *   *

சைவர்கள் உலகத்தை ஆட்டிவைக்கும் திருவருளை நடராஜாவாகக் கண்டார்கள். வைஷ்ணவர்கள் யோக நித்திரையில் அமர்ந்த ரக்ஷக மூர்த்தியாகக் கண்டார்கள். 'ஆடும் தெய்வம்', 'உறங்கும் தெய்வம்'—சைவ வைஷ்ணவ தெய்வம். சிதம்பரத்தில் ஆடும் தெய்வமே ஸ்ரீரங்கத்தில் வந்து, ஆடிய களைப்

பால் படுத்துறங்குகிறது!—என்பர் சைவ வைஷ்ணவ சமரஸம் கண்ட ஒரு ரஸிகர்.

அவ்வளவு தூரம் போவானேன்? சிதம்பரத்தில் ஆடும் தெய்வம் அதே ஊரில் அதே கோயிலில் பள்ளி கொண்ட பெருமாளாகவும் காட்சி தரவில்லையா! நடராஜாவும் கோவிந்த ராஜாவும் ஒன்றே. சாமான்யத் தமி ழனும் கூட, "அரியும் அரனும் ஒண்ணு, அறியாதவன் வாயிலே மண்ணு!" என்று சொல்வதுண்டு.

ஆனல் இந்தச் சமரஸ வாதம் உண்மைதானு! சைவ வைஷ்ணவ பண்டிதர்கள் ஒப்புக் கொள்கிருர் களா? திருமால் அடியார்களான ஆழ்வார்களும் சிவநேசர்களான நாயன்மார்களும்கூடத் தங்கள் இஷ்ட தெய்வத்தையே மேலான தெய்வம் என்று போற்றவில்லையா? ஆம், இஷ்ட தெய்வத்தையே மேலான தெய்வம் என்று போற்று வது ஞானிகளுக்குச் சம்மதம்தான். அப்போதுதானே ஏகாக்ர சித்தம் ஏற்படும், உபாஸனையும் பலிக்கும்?

* * *

நம்மாழ்வார் முதலான ஆழ் வார்கள் தங்கள் இஷ்டதெய்வமான நாராயணனேயே முழுமுதற் கடவு ளாக வழிபட்டார்கள். திருஞான சம்பந்தர் முதலான சிவநேசச் செல் வர்களோ தங்கள் இஷ்ட தெய்வ மான சிவபெருமானேயே தேவாதி தேவன் என்று வணங்கினர்கள். இந்த இரு மதத்தினரும் 'விஷ்ணு வும் சிவனும் ஒன்றே, என்ற சமர ஸக் கொள்கையையும் வெளியிடுகி ரூர்கள். மேலும், இரண்டு தெய் வங்கள் இருக்கமுடியுமா? ஆகவே திருஞானசம்பந்தர் வழிபடும் சிவ மும், நம்மாழ்வார் வழிபடும் நாராய ணனும் ஒரே கடவுளாகத்தானே இருக்கவேண்டும்?

"யார் யார் எந்த எந்தத் தெய் வத்தை வழிபட்டாலும், அந்த அந் தத் தெய்வமாகக் காட்சியளித்து நானே அருள் புரிகிறேன்" என்று கீதாசாரியனுகிய கண்ணபிரான் உறுதி கூறவில்லையா? இதே கருத் தைத்தான் சைவர்களும், "எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் அந்தத் தெய்வமாக வருவர் அம்மையப்பரா கிய சிவபெருமான்" என்கிருர்கள்.

* * *

எனவே சைவ வைஷ்ணவ சம யங்களுக்கு இடையே விசேஷ வேற் றுமை இருப்பதாகக் கருதவேண்டி யதில்லை. வேற்றுமைகள் ஸ்தூல மானவை. சூக்ஷ்மமாகப் பார்த்தால் ஸாரமான ஒற்றுமை புலனுகும்— என்பது என் அபிப்பிராயம். வீர வைஷ்ணவனுக இருப்பதற்கும் வீர சைவனுக இருப்பதற்கும் வீரம் தேவையில்லை, சமரஸம் கண்டு சன் மார்க்க வாழ்வு வாழ்வதற்கே வீரம் வேண்டும், ஞானம் வேண்டும். அதி லும் இந்நாளில் சைவ வைஷ்ணவ சமரஸத்தை வற்புறுத்தாமல் வேற் றுமையைக் கிளறிவிடுவது கொடுமை. சைவ வைஷ்ணவ சமர ஸமே ஹிந்து மதத்தைப் புறமதங் களின் தாக்குதல்களிலிருந்து இன்று காப்பாற்றக்கூடியது.

* * * *

ஜைன பௌத்த சமயங்கள் சன் மார்க்க தீபத்தை ஏற்றி வைத்தன என்ருல், சைவ வைஷ்ணவங்களே அந்தத் தீபத்தைத் தெய்வ ஒளியாக்கி வாடா மணிவிளக்காய்த் திகழ்வித் தன. இந்த இருபெருஞ் சமயங்க ளின் சமரஸமே இன்று நாம் போற் றத்தக்க ஹிந்துமதம். இந்தச் சமரஸ ஞானதீபம் எந்தஇருட்டிலும் புயல்காற்றிலும் அணைந்துபோகா மல் வழிகாட்டத் தக்கது.

நல்வார்த்தை மணித்திரள்

ஸ்ரீவசனபூஷண திவ்ய சாஸ்திரத்தில் பொதிந்துள்ள நல் வார்த்தைகளில் இது வொன்று மிகச் சிறந்தது:—

"குற்றம் செய்தவர்கள்பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும்" என்பதாம்.

* ஆர் வசன பூடணத்தின் ஆழ் பொருளெல்லாமறிவார்? ஆர் அது சொல் நேரில் அனுட்டிப்பார்? * என்று மணவாளமாமுனிகள் அருளிச் செய்தவாறு இந்த நல்வார்த்தையின்படி அனுட்டிக்கவல்ல அதிகாரி இம்மண்ணுலகில் ஒருவருமிலரே. யாவரும் ஸ்ரீஸூக்தியின் பொருளை ஒருவாறு அறிந்திருத்தல் அழகியதன்றோ? கேண்மின்;

நமக்குச் சிலர் குற்றம் செய்தால் அவர்கள் திறத்திலே நாம் பொறுமை காட்டவேணும்; க்ருபை பண்ண வேணும்; சிரித்திருக்க வேணும்; உகந்திருக்க வேணும்; உபகார ஸ்ம்ருதியும் நடக்கவேணும்.

1. அவர்கள் செய்த குற்றத்திற்கு நாம் ஒருபதில் தீங்கு செய்யவாவது, இப்படி நமக்குக் குற்றஞ்செய்தானே! என்று நெஞ்சு கன்றியிருக்கவாவது கூடாது. இதுவே பொறுமையாகும்.

2. பாகவதாபராதிகளை எம்பெருமான் அவச்யம் தண்டித்தே தீர்வனாதலால் 'ஐயோ! நாம் பொறுத்திருந்தாலும் இவர்களை எம்பெருமான் தகுந்தபடி தண்டிக்கப்போகிறானே! அந்தோ! இதற்கு என்ன பண்ணுவோம்!' என்று இரங்கியிருக்கவேணும். இதுவே க்ருபை பண்ணுவதாம்.

3. ஒருவர் நமக்குத் தீங்கிழைப்பதாவது என்ன? நம்மிடத்தில் பல பல குற்றங்குறைகள் இருப்பதாக எடுத்துக்கூறி நம்மை தூஷிப்பதாம். அங்ஙனம் தூஷிப்பதனால் நமக்கு என்ன ஹாநி விளைந்திடுமென்பதை நாம் சிறிது ஆலோசிக்க வேணும். இஹலோகத்தில் கெடுதி, பரலோகத்தில் கெடுதி என்று ஹாநியானது இருவகைப்படும். இவ்விருவகைக் கெடுதிகளுள் பரலோகத்துக் கெடுதி யாதொன்றும் இவர்களால் விளைக்க முடியாதென்பது திண்ணம். இஹலோகக் கெடுதி ஏதேனும் விளைக்கமுடியும். அதாவது, யாரேனும் நமக்கு ஏதேனும் த்ரவ்ய லாபம் உண்டுபண்ண நினைத்திருந்தால் அதை இவர்கள் தூஷணதிமுகத்தாலே தடைசெய்யமுடியும். அப்படிப்பட்ட இஹலோக விரோதங்களைச் செய்தால் உண்மையில் தொலையவேண்டியது தொலைந்தது என்று உள்ளம் பூரிக்கவேண்டுமேயல்லது இழவுக்கு வருந்த வேண்டிய அவச்யமில்லாமையால், "ஐயோ! இவர்கள் செய்த கெடுதியை நாம் ஒரு ஹாநியாக நினைத்து நாமும் தங்களைப்போலே வருத்தப்படுவோமென்று இவர்கள் நினைத்திருக்கிறார்களே! இப்படியும் ஒரு மூடபுத்தி இவர்களுக்கு இருக்குமோ" என்று சிரித்திருக்க வேண்டும்.

4. நமக்குத் தீங்கிழைக்குமவர்கள் நம்முடைய தேஹத்திற்கு ஏதேனும் பரிபவம் பண்ணலாமே தவிர ஆத்மாவுக்கு ஒரு பரிபவமும் பண்ண முடியாதன்றோ? அப்படி அவர்கள் பண்ணும் பரிபவங்களுக்கு இலக்

கான ஸ்வசரீரத்தைத் தனக்கு சத்ரு வாக நினைத்திருக்க வேண்டியவ னுகையாலே தன்னுடைய சத்ரு விஷயமாக ஒருவன் பரிபவம் பண் ணும்போது தான் உகக்குமா போலே உகந்திருக்கவேணும்; தவிரவும், இவர்கள் ஹாநிபண்ணும் த்ருஷ்டபதார்த்தங்கள் தனக்கு ப்ரதிகூலங்களென்று நினைத்திருக்க வேண்டியவனுகையாலே, தனக்கு ப்ரதிகூலங்களானவற்றைத் தவிர்க் கும்போது தான் உகக்குமாபோலே உகந்திருக்கவேணும்.

5. நம்முடைய தோஷங்களை நாம் அநவரதம் அநுஸந்தித்துக் கொண் டேயிருக்கவேணும். இப்படியிருந் தும் நாம் நம்முடைய தோஷங்களை மறந்திருக்கிறோம்; அப்படிப்பட்ட நிலைமையிலே அவற்றை நமக்கு நினைப்பூட்டி இவர்கள் நமக்குப் பண்ணுமுபகாரம் என்னே! என்னே! என்று பெருநன்றி பாராட்ட வேணும்.

இந்த ஐந்துக்குள்ளே ஏதேனும் ஒன்று வாய்த்தாலும் போதும். ஐந்தும் வாய்த்து விட்டால் மூவுல கும் வென்றதாம்.

ஸ்ரீதியாகராஜ கீர்த்தனை

தேவ காந்தாரி ராகம் **ஆதி தாளம்**

பல்லவி

க்ஷீரசாகர சயன நன்னு
சிந்தல பெட்டவலெனு ராமா —க்ஷீர

அநுபல்லவி

வாரண ராஜுனு ப்ரோவனு வேகமே
வச்சினதி வின்னுனுரா ராம —க்ஷீர

சரணம்

நாரீமணிகி சீரலிச்சினதி
நாடே நே வின்னுனுரா
தீருடௌ ராமதாஸுனி பந்தமு
தீர்சினதி வின்னுனுரா
நீரஜாக்ஷிகை நீரதி தாடின
நீ கீர்த்தினி வின்னுனுரா
தாரக நாம த்யாகராஜனுத
தயதோ நேலுகோரா —க்ஷீர

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனே! என்னைக் கவலையில் வாட்டவேண்டுமா? கஜராஜனைக் காப்பதற்காக நீ வேகமாக வந்ததையும், வனிதாமணியின் மானத்தைக் காப்பாற்றியதையும், பக்தன் ராமதாஸனின் பந்த மொழித்துக் காத்ததையும், ஸீதாபிராட்டிக்காக சமுத்திரத்தைத்தாண்டின கீர்த்தியையும் பற்றிக் கேள்விப்பட்டிருகிறேன் தாரக நாம! என்னையும் காப்பாற்று.

6 இடியும் மின்னலும்

"இடியும் மின்னலும் ஈசனின் சிருஷ்டி விநோதங்களன்றோ! மனித சக்திக்குக் கட்டுப்படாத இயற்கை விசித்திரங்களன்றோ! நமக்கு வேணுமென்றபோதெல்லாம் இடி முழங்குமா! மின்னல்கொடி படருமா? அல்லது நாம் வேண்டாமென்றபோது அவை மறைந்துவிடுமோ?"

மேலே படிப்பதற்குப் பொறுமையற்றவராய் கோபிநாத சாஸ்திரிகள் புத்தகத்தைக் கீழே வைத்தார். "என்ன ஆராய்ச்சி! ப்ரகஸ்பதி! புஸ்தகமெழுத வந்துவிட்டான். யாருக்குத்தான் தெரியாது இடியும் மின்னலும் இப்பேர்ப்பட்டவையென்று? அவன்தான் ஒருவன் எழுதினான் என்றால் இந்த மடையன் துட்டு கொடுத்து வாங்கி அனுப்பியிருக்கிறானே!" என்று முணுமுணுத்தார்.

ஸ்வாமி நிர்மலானந்தரின் பிரதம சிஷ்யரான நித்யானந்தர் எழுதிய "இடியும் மின்னலும்" என்ற நூல் எங்கு பார்த்தாலும் ஒரு விழிப்பையும் பரபரப்பையும்உண்டுபண்ணி, முக்கியமாக மாணவர்களிடையே மிகுந்த உணர்ச்சி வெள்ளத்தைக் கிளப்பியது. கடைசிவருஷ M. B., B. S., டாக்டர் பரீக்ஷைக்குப் போகவிருக்கும் ஜகந்நாதனும் அப்புத்தகத்தை வாங்கிப் படித்து மிகவும் ரஸித்தவனாய்த் தன் தந்தை கோபிநாதருக்கு அனுப்பியிருந்தான்.

ஆரம்பத்தில் நான்கு வரிகளைப் படித்துவிட்டுக் கீழே வைத்துவிட்ட சாஸ்திரிகள் திரும்பவும் புத்தகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு "என்னதான் இருக்கு. பார்க்கலாமே!" என்று இங்குமங்குமாகப் புரட்டிப்பார்த்தார். ஓரிடத்தில்,

"இடியும் மின்னலும் ஆகாசத்தில் மட்டும் தோன்றுவனவல்ல. நம் அந்தரங்க வாழ்க்கையிலும் திடீரென்று அவை தோன்றும்; ஓசையும் ஒளியும் இல்லாவிடினும் பலத்த அதிர்ச்சியை விளைவிக்கும் அபார சக்தி வாய்ந்தவை விதியின் விளையாட்டாக அமையும் சப்பவங்கள்."

சாஸ்திரிகள் தம்மையறியாமலே "வாஸ்தவம்" என்று சொல்லிக்கொண்டே வேறொரு பக்கம் தள்ளினார். அதில் :

"காலையிலிருந்தே நல்ல வெய்யில். பிற்பகல் வெப்பம் தாளவே முடியவில்லை. காற்று இருந்த இடம் தெரியாது ஓடிவிட்டது. எங்கும் சூரியபகவான் தனது சக்தியைக் காட்டி தான் எவ்வளவு கடினமாயிருக்கமுடியுமென்று மானிடர் அறியும்படிச் செய்கிறான். அஸ்தமிக்கும் சமயம் திடீரென்று எங்கிருந்தோ மேகங்கள் கிளம்பி—மப்பு, மந்தாரம், இருள் ஏற்பட்டு—இடியும் மின்னலும் தோன்றுகின்றன. உடனே தூரே பெய்யும் மழை நம் பிரதேசத்திற்கும் வருகிறது. கோடை இடியும் மின்னலும் எவ்வளவு சக்திவாய்ந்தவை! "சமீபத்தில் இடிவிழுந்த சப்தம்கேட்டு காது செவிடாகிவிட்டது"; "மின்னல் கொடியைக்கண்ட கண்கள் பார்வையை இழந்தன"—என்பது போன்றசோகச்செய்திகள் ஊரைக் கலக்குகின்றன. ஆகாயத்திலும் இடியும் மின்னலும்; குடும்பத்திலும் இடியும் மின்னலும்! என்னே விதியின் விபரீதம்! யாராவது இவ்வாறு நடக்குமென்று எதிர்பார்க்க முடியுமா? அவன் உள்ளம் அப்படி!"

"புஸ்தகம் வாழ்க்கைச் சித்திரமாய் நன்றாய்தானிருக்கும்போலிருக்கிறது! நிதானமாகப் படிப்போம்" என்று தீர்மானித்தார் சாஸ்திரிகள்!

* * *

நாராயணகிரியெங்கும் ஜகந்நாதனைப்பற்றியே பேச்சு. "எப்படித்தான் மாறிவிட்டான் பார்த்தயா! வயசு வந்துடுத்து, இறக்கை மொளச்சுடுத்து!" என்று பாட்டிமார் சபைகூட்டி விமர்சிக்கலாயினர். அவனுக்கு அதெதுவும் ஒருபொருட்டாகத் தோன்றவில்லை, தன் தந்தையின் கோபக்கனல் தணியுமாஎன்ற ஓரே யோசனைதான்.

கோபம் தணியவேண்டும்; பணம் பெறவேண்டும்; மேற்படிப்புக்குத் தன் இஷ்டப்படி வெளிநாட்டுக்குச் செல்லவேண்டும்—இதுவே அவன் கோரிக்கை. அங்கு விசேஷப் பயிற்சி பெற்றுவந்து இங்கு பெரிய டாக்டராக விளங்கவேண்டுமென்ற எண்ணம் நன்றாக ஊன்றிவிட்டது அவன் உள்ளத்தில்.

பட்டணத்திலிருந்து அவன் நாராயணகிரிக்கு வந்தபோது நடந்த



ரங்களை அவ்வளவு சீக்கிரத்தில் தீர்ந்து விடுமா? மெடிகல் காலேஜில் முதல் நான்கு வருஷங்களும் குடுமியும் தலைப்பாகையுமாக விளங்கிய ஜகந்நாத சாஸ்திரி, ஐந்தாம் வருடத்தில் நாகரிகமனிதனாகி கிருப்பும் ஷோக்குமாக மிஸ்டர் ஜகந்நாத் ஆகக்காட்சியளிக்கலானான். இந்த மாறுதலை—மாறிய தலையை—கிராமத்தில் வீட்டிற்குத் தெரிவிக்கவேயில்லை. இவன் ஸூட்டும் ஹாட்டும் தோல்பெட்டியுமாக ஊர்வந்து சேர்ந்ததுமே கிராம வம்பர்சபை தன் கடனைத் தொலைக்க வாரம்பித்தது. கோபிநாதர் கோபநாதராகவே காட்சியளிக்க இதைவிட வேறு சந்தர்ப்பமுண்டோ! "என்னடா அநியாயம் இது?" என்ற ஒரு வார்த்தை தவிர வேறொன்றும் பேசவே இல்லை. வாரம் ஒன்றாயிற்று. நிலைமை மாறவேயில்லை.

* * * *

"பிள்ளை அழகைப்பாருடீ, பாரு! அவசர ஜோலியா பட்டணம்போய் வரேன்னு கிளம்பினானே, என்ன காரியம் செய்திருக்கான் தெரியுமா? மின்னே 'இடியும் மின்னலும்'னு ஒரு புஸ்தகம் வாங்கி அனுப்பிச்சானே, இப்போ இடி இடிக்கிராப் போலேயும், கண்ணைப் பறிச்சிண்டு போற மின்னல்போலேயும் இதோ கடுதாசி எழுதியிருக்கான், பாரு!" என்று கத்தினார் கோபிநாத சாஸ்திரிகள்.

கைகள் நடுங்க, கண்கள் சிதற, மார்பு படபடவென்று அடித்துக் கொள்ள, பயத்துடன் படிக்கலானாள். தமிழிலேயே இருந்தது கடிதம்:

"எனதாருயிர் தெய்வங்களுக்கு வணக்கம். என்மீது கோபம் கொண்டு மௌனம் சாதித்திருந்த தங்களிடம் என் மனோபீஷ்டத்தை நேரில் தெரிவித்து உத்திரவும் ஆசீர்

வாதமும் பெற்றுக்கொண்டு புறப்பட இயலாது போய்விட்டது. மேற்படிப்புக்குச் சீமை சென்று அங்கு விசேஷப் பயிற்சிபெற்று பெரிய டாக்டராகவந்து உங்களை மகிழ்விப்பேன். இரண்டே வருடம், இரு நிமிஷத்தில் போய்விடும். கலங்காதீர்கள். ஆசீர்வதியுங்கள். கைச்செலவுக்கு நம் பாங்க் அக்கௌண்டிலிருந்து பத்தாயிரம் ரூபாய்தான் எடுத்துக்கொண்டுள்ளேன். வேண்டும்போது முன்னதாகவே எழுதுவேன். இந்தக் கடிதம் கராச்சியில் கப்பலேறும் முன் எழுதுகிறேன், கூடிய சீக்கிரமே விவரமாக எழுதுகிறேன். கோபிக்காதீர்கள். எல்லாம் நல்லதற்கே என்று நம்புங்கள்.

வேணும் நமஸ்காரம்.

ஜகந்நாத்"

"தலைமேலே தூக்கிவச்சுண்டு, ஊருக்குமேலே இடம் கொடுக்காதேன்னு முட்டிண்டேனே, கேட்டளா இரண்டுபேரும்? இருக்கிறது ஒரே குழந்தை, அவனை இப்படி விட்டுட்டா குடும்பம் எப்படிடா?" என்று ஆரம்பித்தாள் ஜகந்நாதனின் பெரிய அத்தை.

* * * *

"ஒரே பிள்ளையாயிற்றே! இப்படி சொல்லாது விட்டுவிட்டுப் போகிறேமே" என்று தோன்றவேயில்லையே அவனுக்கு!"

"மனமா, மதமா ஏதாவது இருந்தாதானே? இப்படி மனசைப் புண்படுத்தரமேன்னு அவன் மனம் நினைத்ததா? அல்லது கண்டவனிடம் கண்டதையும் தின்னவேண்டியிருக்குமே என்றுவது அவன் மனம் நினைத்ததா! அவனுக்கு மனமேது, மதமேது? தந்நலம்தான்!"

* * *

"ரொம்பவும் முன்யோசனையுடன் தான் இடியும் மின்னலும் புத்தகம் எனக்கு வாங்கிஅனுப்பினான். அதில் கூறியிருப்பதுபோல், இடி, மின்னல், மழை, புயல்—எது இருந்தா



லும் அதன்பிறகு அமைதியும் ஏற்படத்தானே செய்கிறது!...எதற்கும் தயாராக இரு என்று அந்தப் புத்தகத்தில் எவ்வளவு தெளிவாக விளக்கியிருக்கிறது...என்னை இதற்கெல்லாம் தயாராயிருக்கும்படித்தான்—எச்சரிக்கை செய்வதற்குத்தான்,—அதை அனுப்பினேரோ?...''

இவ்வாறெல்லாம் கலங்கிக்கொண்டிருந்த கோபிநாதர் சற்று ஆறுதலடையும் பொருட்டு மறுபடியும் அந்தப் புத்தகத்தையே படிக்கலானார். "இடியும் மின்னலும் ஈசனின் சிருஷ்டி விநோதங்களன்ரோ..."

"ஆம்!" என்று இப்புறகையன்னை பதிலளிப்பதுபோல் நாராயணகிரியில் இடியும் மின்னலும் மழையும் தோன்றி, கோபிநாதரின் மனதில் பலவித உணர்ச்சித் திவலைகளைச் சிதறச்செய்தன.

ஸ்ரீமதி ரங்கப்ரியை — குடும்ப வைத்தியம் 6

உஷ்ண கஷாயம்—திருஷ்டி கழித்தல்

கமலம்:—பாட்டி! என் பிள்ளை கிருஷ்ணனுக்கு மேல் வயிற்றை வலிக்கிறது என்று ஸதா கஷ்டப்படுகிருன். ஸாதம் பிடிக்கவில்லை. அதற்கு என்ன செய்வது?

பாட்டி:—ஸரி. ஒரு பரிகாரம் சொல்கிறேன் கேள். முதல் நாள் சாயந்திரம் உன் கையால் ஒரு பிடி முழு மிளகை எடுத்து அரை ஆழாக்கு ஜலத்தில் ஊறவைத்து மறுதினம் காலையில் அதை அடுப்பில் வைத்துக் காய்ச்சி வடிகட்டி அக் கஷாயத்தில் கொஞ்சம் பால் சர்க்கரை போட்டுக் கொடு. காய்ச்சின மிளகை வடியவைத்து நிழல் உலத்தலாய் அம்மிளகை உலர்த்தி மறுபடியும் சாயங்காலம் அரையாழாக்கு ஜலத்தில் போட்டு ஊறவைத்து மறுதினம் காலையில் காய்ச்சி வடிகட்டி கொடு. இவ்விதம் ஐந்து தினம் செய்தாயானல் வயிற்றுவலி நின்றுவிடும். மேல் வயிற்றை வலித்தால் அதிக உஷ்ணமென்று சொல்வார்கள். அதற்கு இந்த கஷாயம் மிகவும் நல்லது.

சாப்பாட்டு சமயத்தில் யாராவது பார்த்து கண் திருஷ்டியாயிருந்தாலும் அதற்கு எரிஎண்ணெய் காய்ச்சிச் சூடினல் நல்லது என்று பெரியவாள் சொல்வா. அதாவது:—செய் நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் மூன்றும் இலும்பக்கரண்டியில் நன்ருய்க் காய்ச்சி காலையிலோ சாயங்காலத்திலோ சமையலானதும் சாதம் செலவழியாததிற்கு முன்பு உள் வாசற்படி எதிரில் உன் பிள்ளையை நிற்கவைத்து நீ வாசற்படிக்குள்ளண்டையில் நின்று ஓர் இலையில் வெறும் சாதத்தை கிச்சிலிக்காயளவு வாசற்படிமேல் வைத்து, கரண்டி எண்ணெயை எரியும்படிக் காய்ச்சி ஸாதத்தின்மேல் விடு. அது திக்கென்று எரியும். அது அடங்கினதும் அதில் மூன்று விரல்கொண்ட சாதம் மூன்றுதரம் கொடுத்துவிட்டு மீதியை நாய்க்குப் போட்டுவிடு. குணமாய்விடும். நான் போய் வருகிறேன்.

கம:—அப்படியே ஆகட்டும். இந்தாருங்கள் மஞ்சள், குங்குமம்.

நந்தவனம் பார்த்திப வருடம்

வஸந்த, ருதுமலர்

வழக்கம்போல் பல அழகிய கலர்ப்படங்களுடன் மலிவுப் பதிப்பு ரூ. 1—2. ரிஜிஸ்ட்ரேஷன் செலவு அணு 3. 6 ருதுமலர்களும் தபால் செலவுள்பட ரூ. 7. வி. பி. கிடையாது.

லூயி பாஸ்டரும், வாக்ஸீன்களும்

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M. B., B. S. D. T. M.

சென்ற இதழ் தொடர்ச்சி

இந்த விஷயம் பாஸ்டரின் உள்ளத்தில் உதித்திருக்கவேண்டும் என்பது பின்னே சொல்லப்போகிற விஷயங்களால் வெளிப்படுகிறது. பிரான்சு (France) தேசத்துக் குடியானவாகளுக்குப் பல வழிகளிலே கஷ்டங்கள் ஏற்பட்டன. இவற்றிற்கு ஒரு காரணம் காலருப் போன்ற ஒரு வகையான வியாதியினாலே கோழிகள் கணக்கில்லாமல் இறந்து போனது. இந்த வியாதிக்கு ஒரு வகையான அணுஜீவன்களே காரணம். லூயி பாஸ்டர் இந்த அணுஜீவன்களைக் கோழிகளின் தசையிலிருந்து பிரித்து எடுத்து கண்ணாடி பாத்திரங்களிலே வெகு பக்குவமாகப் பயிர் செய்தபோது அந்த அணுஜீவன்களின் வீரியம் குறைந்து போவதைக் கவனித்தார்.

இப்படி மாறுதல் அடைந்த அணுஜீவன்களைக் கோழிகளின் உடலில் செலுத்தியபோது அவை இறக்காமல் பிழைத்துக்கொண்டன. இதன்பிறகு இந்தக் கோழிகளுக்கு அந்த வியாதியும் வரவில்லை. இப்படியே மாறுபாடு அடைந்த அணுஜீவன்களை எல்லாக் கோழிகளுக்குள்ளும் செலுத்தி நோய் பரவாதபடி தடுத்துவிட்டார். இந்த முறைக்குத்தான் வாக்ஸிநேஷன் (Vaccination) என்று பெயர். இப்படி வாக்ஸிநேஷன் செய்வதினாலே உடலில் ஏற்படும் நிலைமைக்கு 'நிவர்த்தனம்' (Immunity) என்று பெயர்.

லூயி பாஸ்டர் இப்படியே இன்னும் சில வியாதிகளுக்குக் காரணமான அணுஜீவன்களின் வீரியத்தைக் குறைக்கும் முறைகளைத் தெரிந்து, வாக்ஸீன்களும் தயாரித்தார். இவற்றுள் மிகவும் முக்கியமானவை குடியானவர்களுடைய ஆடுமாடுகளுக்குள் பரவிய நோயாகிய ஆந்த்ராக்ஸ், நாய்க்கடியினால் உண்டாகும் ரேபிஸ் (Rabies) என்ற இவ்விரு வியாதிகளுக்குள்ள வாக்ஸீன்களே.

லூயி பாஸ்டர் முதன்முதலில் ஆந்த்ராக்ஸ் எப்படிப் பரவுகிறது என்பதைத் தெளிவாக்கினார். ஆந்த்ராக்ஸினால் இறந்துபோன ஆடுமாடுகளைக் கண்ட இடங்களில் புதைத்தார்கள். அவைகளுடைய இரத்தம் பூமியில் கலந்திருந்தது. மண்ணோடு கலந்த ஆந்த்ராக்ஸ் அணுஜீவன்கள் உடனேயே அணுபீஜங்களாக மாறிவிட்டன. இந்த ஆந்த்ராக்ஸ் அணுபீஜங்களை மண்ணுக்குள்ளே இருந்து வெளியே கொண்டு வர மண்ணுண்ணிப் புழு முதலியன போன்ற இயற்கைக் கர்த்தாக்கள் வெகு துரிதமாக வேலை செய்தன. மண்ணுக்குள்ளிருந்து வெளிப்பட்ட இந்த அணு பீஜங்கள் புல்லின் வழியாக மாடுகளுக்குள்ளே சென்று திரும்பவும் வியாதிக்கு ஏதுவாயின. இதைத் தெளிவாக்கிப் பரிகாரமும் கண்டுபிடித்துக் கொடுத்த பரோபகாரி லூயி பாஸ்டர்.

இந்த வாக்ஸிநேஷன் (Vaccination) முறையை மனிதர்களுக்குப் பயன்படுத்த லூயி பாஸ்டருக்கு ஒரு ஸந்தர்ப்பம் வாய்த்தது. ரேபீஸ்

(வெறிநோய்) பிடித்த நாய் தெருவில் பலரைக் கடித்தது. ஒரு வாலிபன் அதனோடு சண்டைசெய்து வாயைப் பிடித்துக் கிழித்துக் கொன்றான். இதற்குள் அந்தப் பைத்தியம் பிடித்த நாய் பல இடங்களில் அவனைக் கடித்து விட்டது. லூயி பாஸ்டர் இந்த பையனுக்குத் தான் முதன் முதலிலே ரேபீஸ் வாக்ஸினைக் குத்தி, இந்த வியாதி வராதபடி சொஸ்தப்படுத்தினார்.

பாரிஸ் நகரிலே, பாஸ்டர் இன்ஸ்டிடியூட் என்னும் ஆராய்ச்சி ஸ்தாபனத்திற்கு முன்பாக ஒரு ஞாபகார்த்தச்சிலை வைத்திருக்கிறது. அது லூயி பாஸ்டருடைய உருவச் சிலை அன்று. வெறி பிடித்த நாயோடு சண்டை போட்ட அந்தப் பையனுடைய சிலையையே ஞாபகார்த்தமாகவைத்திருப்பதைப்பார்க்கலாம். வெறி பிடித்த நாயோடு சண்டை போடுகிற பாவனையாகவே அந்தச் சிலையைச்செய்து வைத்திருக்கிறது.

லூயி பாஸ்டர் மனிதருக்கு வரும் காலராநோய்க்கும் வேறுசிலநோய்க்கும் வாக்ஸின் குத்தும் முறையைக் கண்டு பிடித்தார். வாக்ஸின்களை உயிருள்ள அணுஜீவன்களாலே செய்துவந்தார்கள். வாக்ஸின் செய்வதற்காக அணுஜீவன்களைக் கொல்வதில்லை; அவற்றின் வீரியத்தை மட்டும் குறைத்து வந்தார்கள். வீரியம் குறைந்தாலும் இயங்க வல்ல அணுஜீவன்கள் மாத்திரமே வாக்ஸின் செய்வதற்குப் பயன்பட்டு வந்தன. இப்படிப்பட்ட வாக்ஸின்களைக் குத்தும்போது, தேக ஆரோக்கியத்திற்குச் சில தோஷங்கள் ஏற்பட்டன. 1886 ஆம் வருஷம் தியோபால்டு ஸ்மித் (Theobald Smith) என்பவர் வாக்ஸின் செய்யும் முறையை முழுவதுமாக மாற்றிவிட்டார். வீரியம் குறைந்த அணுஜீவன்களை உடலில் செலுத்தும்போது அவை நாசமடைகின்றன. அப்படி அவை நாசமடையும்போதுதான், உடலில் 'நிவர்த்தனம்' என்னும் நிலைமை ஏற்படுகிறது. தியோபால்ட் ஸ்மித் இதைக் கண்டு, இறந்த அணு ஜீவன்களைக் கொண்டு வாக்ஸின் தயாரித்து உடம்பிலே குத்தினாலும், 'நிவர்த்தனம்' எற்படும் என்று அறிந்தார். உடனே இந்த துறையில் வாக்ஸின்களை தயாரிக்கத் தொடங்கினார். அந்தந்த நோய்களுக்கு உரிய அணுஜீவன்களை வளர்த்து, அதி உஷ்ணத்தினாலோ ரசாயன திராவகங்களினாலோ அவற்றைக் கொன்று, போதுமான அளவில் உடம்பிலே குத்திச் செலுத்தி நோய் வராமல் தடுத்தார். இந்தப் புதுமுறையினால், காலரா பிளேக் டைஃபாய்டு முதலான நோய்களுக்கு, சரீர சுகக் குறைவு நேரிடாதபடி வாக்ஸின்கள் தயாரித்து ஊசி குத்த முடிந்தது.

இதுமட்டும், தயாரித்துவந்த வாக்ஸின்களைக் குத்தின இடத்திலே கடினமாக கட்டிகள் ஏற்பட்டன. தியோபால்டு செய்த வாக்ஸின்களை உபயோகித்தபோது இப்படிப்பட்ட கட்டிகள் எழவில்லை.

எந்த வியாதிக்காக வாக்ஸினேஷன் செய்கிறோமோ அந்த வியாதி வராதபடி தடுக்கும். டைஃபாய்டு வாக்ஸின் டைஃபாய்டு ஜுரம் வராதபடி தடுக்கும். ஒரு வியாதிக்காக அதற்குரிய வாக்ஸினை குத்திச் செலுத்தும்போது, உடம்பிலே அந்த வியாதியைத் தடுக்கக் கூடிய ஒரு வகையான சக்தி ஏற்படுகிறது. இந்த சக்திக்குத் தான் நிவர்த்தனம் என்று பெயர். நிவர்த்தனம் இயற்கையாகவே உடலில் ஏற்படலாம். இதற்கு இயற்கை நிவர்த்தனம் (Natural immunity) என்றுபெயர். நோயினால் வருந்தும் ஒரு நோயாளி

யின் உடம்பில், அந்த நோய் நீங்கின பின்பு உண்டாகும் நிவர்த்தன சக்திக்குச் செயற்கை நிவர்த்தனம் (artificial immunity) என்று பெயர்.

நிவர்த்தனசக்திகள் நோய்களைப் போலவே அனந்தமானவை. அந்தந்த வியாதிக்கு உரிய நிவர்த்தன சக்தி உண்டு. டைபாய்டு ஜுரத்திலிருந்து சொஸ்தமடைந்தவனுக்கு திரும்ப வராதபடி தடுக்கும் நிவர்த்தன சக்தி அவன் உடம்பிலே ஏற்பட்டுவிடுகிறது. அப்படியே டைபாய்டு வாக்ஸிநேஷன் செய்தாலும் டைபாய்டு ஜுரம்மட்டும் வராதபடிதடுக்கும் நிவர்த்தனசக்தி ஏற்படுகிறது. அதே மனிதனுக்கு வேறு நோய்கள் வரா என்று சொல்ல முடியாது.

இந்த நிவர்த்தன சக்தி உடலில் தசைகளில் வருகிறதா? இரத்தத்தில் உண்டாகிறதா? நிவர்த்திக சக்தி என்பது எப்படிப்பட்டது? இவற்றை எல்லாம் ஆராய்ந்து அறியத் தொடங்கினார்கள். இந்த ஆராய்ச்சியிலே மிகவும் பிரக்யாதி பெற்றவர்கள் மெச்னிக்காஃப் (Metchnikoff) என்ற ருஷ்யரும், ஜெர்மானியரான டாக்டர் எர்லிக் (Ehrlich) என்பவரும், ஹாலந்து தேசத்தாரான டாக்டர் பார்டட், (Bordet)லான்ட்ஸ்டெயினர்(Land-steiner) என்பவர்களுமாவர். இவர்கள் பல வருஷங்களாக நிவர்த்தன சக்தியைப்பற்றி ஆராய்ந்து அது ஏற்படும் வரலாற்றைத் தெரிந்து நோய்களைத் தடுக்கும் முறைகளைப் பலவாருகத் தயாரித்தார்கள். இப்பொழுது 'நிவர்த்தன சக்தி ஞானம்' வைத்திய சாஸ்திரத்தில் மிகப் பெரிய ஒரு அங்கமாகிவிட்டது. நோயாளியைப் பிடித்திருக்கும் நோய் இன்னதென்று அறிவதற்கும், தொத்து நோய்களைச் சொஸ்தப்படுத்தித் தடுப்பதற்கும் பலமுறைகள் வழக்கத்திலே இருந்து வருகின்றன. வேறு ஞானத் துறைகளைப் போலவே இந்த நிவர்த்தன ஞானமும் ஒரு மகா ஸமுத்திரம் போலப் பெருகிக் கிடக்கிறது.

தற்போது கைவசமுள்ள வை. மு. கோ. நாவல்கள்.

புதிய பதிப்புகள்.

54.	புகழ்மாலை	1-12
63.	இதயஒலி	1-12
64.	மலர்ந்த இதழ். பாகம் I.	1—4
	,, ,, ,, 2	1—4
65.	அமுதமொழி (கிளேஸ்)	2—8
	,, ,, (சாதா)	2—0
11.	வீரவஸந்தா	1—0
46.	வத்ஸகுமார்	1—0
62.	பிரார்த்தனை	1—0
66.	பிரதிக்ஞை	1—0
25.	பக்ஷமாலிகா	0—8

முன் பதிப்புகள்

57.	ஞானதீபம்	2—4
51.	உணர்ச்சி வெள்ளம்	2—0
48.	கானல் நீர்	1-12
56.	சுடர் விளக்கு	0—8
19.	ஸரஸராஜன்	0—6
42.	உளுத்த இதயம்	—

தாரண ஹ்ல நந்தவனம்

வஸந்த ருதுமலர் (கிளேஸ்) ரூ. 1—8	ஹேமந்த ருதுமலர் (சாதா) 1—2
கிரீஷ்ம ருதுமலர் ,, ரூ. 1—8	சிசிர ருதுமலர் ,, ,,
வர்ஷ ருதுமலர் ,, ,,	,, ,, (கிளேஸ்) 1—8

வை. மு. ஸ்ரீ. உதயசூரியன் 2-ம் பதிப்பு (கிளேஸ்) 1—4

மூவரும் தொழுத கோயில்

கடகடவென்ற இடியின் பெரு முழக்கம், ஊ ஊ என்று உறுமும் பேய்க்காற்று, ஆற்றில் இறங்கிவிட்டார். "அடாடா! எப்படியாவது இருள் சூழுமுன் ஊர்போய்ச் சேர வேணுமேஎன்றுமுணுமுணுத்தவண்ணம் மெல்ல மெல்ல நடக்கலானார். காற்றோ முன்னேற ஒட்டாமல் தடுக்கிறது. துரிஞ்சிலாறும் பெண்ணையாறும் ஒன்றுசேருமிடத்திலுள்ள மணல்திட்டிலே சற்று தங்கிப் பிறகு போகலாமோ என்றும் தோன்றுகிறது. ஆனால் அவருக்கோ அந்த நதியின் குணம் தெரியும். வெண்ணெய்உருகுமுன் பெண்ணைபெருகும் என்ற முதுமொழி அவர் மனத்துள் எழுகிறது. மணலில் புதைந்து புதைந்து கால்கள் தள்ளாடின. இருந்தாலும் எப்படியாவது ஊர் போய்ச்சேரவேணுமென்கிற ஆவல் முன்னே தள்ள எட்டி அடி வைத்து முன்னே நடக்கிறார். இந்நிலையில் வானம் இன்னும் கருக்கிறது. இருள் உலகத்தையேவிழுங்கிவிடுவதுபோல் சூழ்ந்துகொள்ளுகிறது. மெல்ல மெல்லக் கரையை அடைவதற்குள் சிறுதூற்றலும் தொடங்கிவிட்டது.

எங்கேயோ நெடுந்தூரத்தில் "மினுக் மினுக்" கென்று தெரியும் ஒரு சிறு தீபத்தின் ஒளி. வெளிச்சம் வரும் திசையை நாடிச் சென்றார் அவர். மனமோ எம்பிரான் திருநாமத்தை உச்சரித்த வண்ணம், திசைதெரியாத அவ்வந்தகாரத்தில் முன்னேறிப் போய்க்கொண்டே இருந்தார் அவர். எவ்வளவுநேரம் நடந்திருப்பாரென்பதே தெரியாது வெளிச்சம் தோன்றியவிடத்தை அடைந்தார். ஆனால் அங்கே விளக்கில்லை.

ஓலைவேய்ந்த ஒரு சிறு குடிசை, கதவு என்ற படல், அது தாளிடப் பட்டிருக்கிறது. காற்றின் வேகத்தினால் எரிந்துகொண்டிருந்த அகல் நின்றுபோயிருக்கவேணும்! "எம் பெருமானே! இதென்ன சோதனை! இந்தக் கூரையையும் காற்று பிய்த்துக்கொண்டு போய்விடும்போலிருக்கிறதே! இந்தக் கொட்டுகிற மழையில் எங்கேபோய்நிற்பேன்!" என்று புலம்பிக்கொண்டிருந்தாள் ஒரு கிழவி.

அந்தக் கதவு தடதடவென்று தட்டப்படும் சப்தம். "யார் அது? இந்த மழை இருட்டில்"

"தாயே! வழிப்போக்கன் தங்க இடமில்லை. தூற்றலும் சாரலும் உடலைத் துளைக்கிறது."

கிழவியின் நெஞ்சம் நெகிழ்ந்தது. "அப்பா! நீ யாராயிருந்தாலும் சரி, இந்த வீட்டிலே ஒழுகாதஇடம் இந்த நடை (இடைவழி, ரேழி) ஒன்றுதான். இதன் திண்ணையில் ஒருவர் படுக்கலாம் என்று சொல்லியவளாய் அந்தக்காரிருளில் தட்டுத்தடவி வந்து கதவைத் திறந்தாள். அதிதி இன்னானென்று அறியமுடியவில்லை. மழை ஓசையில் குரலும் பேச்சும் எங்கிருந்தோ கேட்பதுபோலிருந்தன. வழிப்போக்கன், "அப்பாடா" வென்ற பெருமூச்சுடன் நடைத் திண்ணையிற் படுத்தான். இடியும் மின்னலும் அதிகரித்தது. காற்றின் வேகத்தில் கதவும் தடாலென்று விழுந்தது.

நடையை அடுத்த தாழ்வாரத்தில் சுவரோடு ஒன்றியவளாய் கையைக்

கட்டி, கூனிக்குறுகி மூட்டைபோல் உட்கார்ந்திருந்தாள் கிழவி. மழை பாட்டம் பாட்டமாய்ப் பெய்து சற்றே குறையும் தருணம். சொட்டச்சொட்ட நனைந்தவனைய் வந்து இடம் வேண்டினன் இன்னெருவன் 'ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், இருங்கள்' என்று குளிரால் நடுங்கியவண்ணம் சொன்னள் கிழவி. அவள சொல்லி வாய் மூடவில்லை. அதற்குள் அங்கே இன்னெருவர் வந்து நின்ருர். மிகவும் தீனமான ஒரு குரல் "அம்மணி! மழைக்கு ஒதுங்க இடமுண்டா? என்று கேட்டது. இடைஇடையே வீசும் மின்னல் வெளிச்சத்தால் மூன்ருவரைப்பார்த்து மிகவும் நடுங்கிய குரலுடன் "மூவர் நிற்கலாம் நிற்பதானல் வாரும்" என்ருள். ஒருவரோடொருவர் நெருங்கி ஒருவரை யொருவர் பற்றியவராய் மூவரும் நிற்கலாயினர்.

சற்றுநேரம் கழிந்தது. மழை பெய்துகொண்டே இருந்தது. மின்னலின் ஊமை வெளிச்சத்தில் நான் காமவர் ஒருவர் வந்த "அம்மணீ! எனக்கும் இடம் கொடுக்கவேணும்" என்று கேட்டதும் கிழவிக்குக்கனவு போலிருந்தது. நான் காமவனும் நெருங்கி நின்ருன். மற்ற மூவரும் ஒடுங்கி ஒடுங்கி நிற்க இவனே அவர்களைப் பின்னும் நெருக்குகின்ருன். "அடாடா இதென்ன பூதமா, பிரம்மராக்ஷஸா. துளிக்கூடக் கருணையில்லாமல் இப்படி நெருக்குகிருனே, அப்பப்பா! இந்த மழை உபத்திரவம் தாளாமல், தவிக்கிறது போதாதென்று இது வேறே? பகவானே! இதென்ன சோதனை? எ மாதவா! மதுசூதனு!" என்று ஓலமிட்டார் முதியவர். அவ்வளவுதான்! ஒரே ஒரு மின்னல், "கருமுகில் தாமரைக் காடுபூத்து இருசுடர் இருபுறத்தேந்தி" ஓர் செம்பொற் குன்றில்மேல், வருவதுபோன்ற அற்புதக்காட்சி. ஒரே சோதிமயம், ஒளிப்பிழம்பு. ஆச்சர்ய மிகுதியினல் திகைத்துப்போனர்கள் மூவரும்.

'திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன்' என்று தொடங்கினர் ஒருவர். கண்டோம்! கண்டோம்! கண்ணுக்கினியன கண்டோம்! ஆனல் கண்டதுமட்டும் போதுமா? இந்தக் காரிருளில் சோதியாய்வந்து ஆட்கொண்டகடவுளை விளக்கேற்றி வழிபடவேணும். உலகை அளந்தவனுக்குச் சின்னஞ்சிறிய அகல் விளக்குப் போதுமோ? என்று நினைத்ததுபோல, இந்த உலகையே ஒரு அகலாகவும், கடலையே நெய்யாகவும், அதற்கு எத்தகைய திரி, அல்லது தீபம் வேண்டும் என்று சிந்தித்துத் தீர்மானித்தவர்போல்,

வையம் தகளியாய், வார்
கடலே நெய்யாக,
வெய்ய கதிரோன் விளக்காக,

அண்டமளந்த பிரானை வழிபடத் தொடங்கினர்.

மூன்ருமவரோ இன்னும் ஒருபடி மேலே போகிருர். அன்புதான் சேவையாய், கைங்கர்யமாய் மலரவேணும் அன்புருவமான கடவுளுக்கு அன்பும் ஆர்வமுமே தான் பூசனைக்குப் பொருள் என்று நினைத்தவர்போல்

அன்பே தகளியாய் ஆர்வமே
நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாய்.

என்றும் வழிபடத் தொடங்கினர். இம்மூவர் யார்? இவர்கள் தொழுத தலம் எது? முதலாழ்வார்கள் என்று வைஷ்ணவர்களாற் புகழப்படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்பவர்கள் பலநூற்ருண்டுகளுக்கு முன்

னர் திருக்கோயிலூரிற் கண்ட அற்புதக்காட்சி இது.

நடுநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய திருக்கோயிலூர் இன்றும் அப்பெயருடனேயே காட்சிதருகின்றது. சைவமும் வைஷ்ணவமும் தழைத்து ஓங்கியதற்கறிகுறியாக வீரட்டேசுவரரும் உலகளந்தாரும் அடுத்தடுத்து தென்பெண்ணை நதியின் கரையிலே கோயில் கொண்டிருக்கிறார்கள். ஆற்றின் இக்கரையில் ரயில் நிலையத்தை அடுத்து அறைமணி நல்லூர் என்ற சிவஸ்தலம், அதையடுத்து ஒரே பரந்த மணல் வெளியும் குன்றுகளும். துரிஞ்சிலாறு என்னும் ஒரு காட்டாறு இங்கே தென்பெண்ணையுடன் கலந்து தோட்டம் துறவுகளைச் செழிக்கச்செய்யும். ஆற்றின் நடுவே, அங்கங்கே அழகிய மணற் திட்டுக்கள், சவுக்கு முதலிய மரங்கள் கூட்டம் கூட்டமாய் நிற்கும்.

வருடத்தில் பெரும்பான்மையான மாதங்களில் தண்ணீர் அதிகமிராது. வந்தால் ஒரே வெள்ளக் காடுதான். ஆற்றையடுத்துக் கரை ஏறிய உடன் கீழூர் என்று சொல்லப்படும் வீரட்டேசுவரர்கோயில் விமானம் நம்மை வரவேற்கும். தமிழ்நாட்டிலுள்ள எட்டு வீரட்டங்களுள் இதுவும் ஒன்று என்று புராணம் சொல்லும். திருமலைத்தெய்வீகன் என்னும் அரசன் கட்டுவித்த தாகச்சரித்திரம் சொல்லும். அந்த வம்பெல்லாம் நமக்கேன்? ஆராய்ச்சிக்காரர்கள் பாடு.

ஆனால் பாரி மகளிராகிய அங்கவை, சங்கவை இருவரையும் ஔவைப்பிராட்டியார் சோழபாண்டியர்களுக்கு மணம்புரிவித்ததும் இங்கேயே, ஆகவே, இந்தக் கோயில் சங்ககாலத்திற்கு முன் இருந்திருக்க வேண்டும் என்றே நமக்கும் தோன்றும்.

அழகியதும் நடுத்தரமானதுமான கோயில், சுற்றுப்பிராகாரங்கள் சமீபத்தில் 35 வருஷங்களுக்குமுன் புதுப்பிக்கப்பெற்றவை, முன் கோபுரத்தின் உட்புறத்தில் பாணாஸுரன் தவம் செய்யும்காட்சி சுவர்களில் சித்திரிக்கப்பட்டிருக்கும். மேல் தளத்தின் உட்புறத்தில், அங்கவை சங்கவை திருமணம், ஔவையார் பங்குச்கு மூன்று பழம் தரப்பனை துண்டம் தந்தது, பெண்ணையாறு, வெண்ணெயும் பாலுமாய்ச் சொறிந்தது, முதலியவைகள் சித்திரமாக எழுதப்பெற்றிருக்கும். கலியாண ஓலை எழுதிய விநாயகக்கடவுள் பிராகாரத்தின் ஓர் மூலையில் அமைதியாய் உட்கார்ந்திருப்பதைக் காணலாம். ஈசுவர ஸந்நிதியை அடுத்து தேவியின் சந்நிதி. உலகளந்தாருக்குத் தங்கை நான்தான் என்று சொல்லிக்கொள்வதுபோல் கம்பீரமாய் நின்று அபயம் கொடுக்கும் அவள் ஸௌந்தர்யம் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். அர்ச்சிப்பவர் ஆறடி உயரமிருந்தாலும் ஏறிட்டுப்பார்த்து நிமிர்ந்துதான் பூஜிக்க வேணும் அவளை, அப்படிப்பட்ட காம்பீர்யம். புன்னகை தவழும் முகமும் கருணைபொழியும் கண்களும் காண்போர் கருத்தைக் கவரும்.

இந்தக் கோயிலின் படித்துறையை அடுத்து பெண்ணையாற்றின் நடுவே, கபிலபாறை என்ற பெயருடன் புராணப்பிரசித்திபெற்ற பாறை வெண்ணெயை உருட்டி நதிநடுவே வைத்ததுபோல் வானை அளாவிநிற்கும். அதன் மீது ஒரு சிறுகோயில் ஏறுவதற்கு மாடிப்படிகள் போன்ற செங்கற்படிக் கட்டுகள். இதில் தீவளர்த்து தமது சரீரத்தை அதில் விட்டார் கபிலர்

அதனால்தான் கபிலபாறை என்று பெயர் என்று கர்ணபரம்பரைக் கதைகள் சொல்லும். வெள்ளத்தின் நடுவே அகப்பட்ட ஒரு இடைச்சி யைக்காத்தது என்றும் அதனால் இடைச்சிபாறை என்றும் சிலர் சொல்வதுண்டு இருகரையும் புரள வெள்ளம் வந்தாலும் கபில பாறை யின் அடியைத் தொடுவதில்லை. பார்ப்பதற்கு சமதரைபோல்தோன் றினாலும் வெள்ளத்தில்நனைவதில்லை, இதை ஓர் அற்புதம் என்று ஊரார் வந்து பார்ப்பதுண்டு.

கிழுரைத்தாண்டிச் சில வீதிகள் தாண்டியதும் நமது கண்களுக்கு முதன்முதல் புலப்படுவது வானை அளாவிநிற்கும் கோட்டை கோபு ரம். இதன் வழியேயும், அடுத்துள்ள மொட்டைக்கோபுரம் என்று வழங் கும் கலசங்களற்ற சிறு கோபுரத் தின் வழியாகவும் வண்டிகள் செல் லும். இந்தக் கோட்டைக்கோபுரம், சந்நிதித்தெருவின் கோடியில் இருக் கிறது. இதற்கு வெளியேதான் ரத வீதி, ரதம் கோபுரத்தை அடுத்த வெளியில் நின்றிருக்கும்.

சந்நிதித்தெரு என்பது விசால மான வீதி, தெருவின் இருபுறங் களிலும் சுமார் ஐம்பதடிக்கு ஒன் ருக நாற்கால் மண்டபங்கள் ஓங்கி உயர்ந்து நிற்கும். மண்டபத்தின் மீது கோபுரம்போன்ற சின்னஞ் சிறு விமானங்கள். சந்நிதிக்கு எதிரி லுள்ள பதினாறுகால் மண்டபத்தின் நாற்புறம், இதேபோல உயர்ந்த நாற்கால மண்டபங்கள். கண்ணன் உறியடித்திருவிழாவிற்கு இம்மண்ட பங்களிலேதான் உறிகட்டுவது வழக்கம்.

கோட்டைகோபுரத்திற்கு அடுத்த படியாககோயிலின் முன் கோபுரம் மிகமிக அழகு வாய்ந்தது. கோபுர வாசலின் இரு பக்கத்திலும் பெரிய உயர்ந்த மேடைகள். அவற்றின்மீது ஒரு புறம் மிகப் பெரிய மகிழமரம். மற்றொருபுறம் புன்னை. இவை களைத் தாண்டி கோபுரத்துட் புகுந் தால் மிகவும் விசாலமான பெரிய மண்டபம். ஒரே புழுதி மயமாய் பெருக்குவாரும், சீர் செய்வாரு மின்றி வௌவால்களுக்கும் தூரிஞ் சில்களுக்கும் உறைவிடமாயிருக்கும் இது கோயில் இன்று இருக்கும்நிலை.

ஆனால் சுமார் முப்பது வருஷங் களுக்குமுன் அக்கோயில் இருந்த நிலையைக் கண்டவர்கள் இன்று காண்பார்களானால் கண்ணீர் துளிக் கும். கோயில் பொதுவாய் இருந்த பொழுது உத்சவங்களும் ஆறுகால பூஜையும் வெகு விமரிசையாய் நடைபெறும். பிரம்மோத்ஸவம், அத்யயனோத்ஸவம் என்று வழங்கும் இராப்பத்து பகல்பத்து உத்ஸவங் கள் ஸ்ரீரங்கத்துக்கு அடுத்தபடி யாகச் சொல்லலாம். ஸ்வாமி வீதி வலம் வந்து திரும்பி இருக்கை சேரும்பொழுது முன் சொன்ன பதினாறு கால் மண்டபத்தில் நிற்க, முறையாய் வேதபாராயண முதல், மேளக்காரர், நாட்டியக்காரிகள் எல் லோரும் வந்து எச்சரிக்கை பாடி மும்முறை வலம்வந்து விடைபெறு வர். கடைசியாக அழகிய தென் கலைத் திருமண்காப்பணிந்தகோயில் யானை ஓவென்று பிளிறி விடை பெற்றுக்கொள்ளும். ஆனால் இப் பொழுதோ கோயில் வானமாமலை மடத்து ஜீயர் ஸ்வாமிகளின்சொத்து என்ற முறையில் இருப்பதால்,ஏதோ ஒருவிதமாய் தேர் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

கோயிலின் முன் பிரகாரத்தைத் தாண்டியதும் அடுத்தது மற்றொரு பிராகாரம், அதன் நடுவே விசால மான மேடை அதனடுவில் தான் சந்நிதிக்குள் நுழையும் வாயில்,

ஆனால் சந்நிதி கோபுரத்திலிருந்து நேரே தெரியாது, திருமலைக்கோயில் போல் இடது புறமாகவே செல்ல வேணும். இந்த மேடையில் ஏறினால் துவார பாலகர்களைத் தாண்டி சந்நிதியை அடையலாம். சந்நிதியைப் பார்த்தவண்ணம் விழித்து நிற்பார் கருடாழ்வார். மூலஸ்தானம் மற்றக் கோயில்களைப்போல் நெருக்கமாயில்லாமல் விஸ்தாரமாயிருக்கும் பூமியில் மாவலியின் தலையின்மேல் ஒரு பாதத்தை ஊன்றியவராய் ஆகாயத்திலே மற்றொரு காலுமாய், உலகை அளந்தவண்ணம் நிற்பார் பெருமாள். சுற்றிலும் காசியபர், அதிதி, சுக்ராசாரியார் முதல் இன்னும் யாகத்தின்பொருட்டு வந்த முனி கணங்கள் எல்லோரையும் இன்று காணலாம்.

அந்த திவ்யமங்கள விக்ரகத்தின் அருள்நோக்கு காண்பவர் கண்களையும் கருத்தையும் கவரும். சந்நிதிக்கு வலப்புறத்திலே துர்க்காதேவியின் சந்நிதி. இது மற்றெந்த விஷ்ணு ஆலயங்களிலும் இல்லாத ஒரு புதுமை. சைவமும் வைஷ்ணவமும் சமரசமாய் வாழ்ந்ததற்கு அறிகுறியாய் நிற்கும் அந்த சந்நிதியில் அர்ச்சகர் வெகுபக்தி சிரத்தையுடன் துர்க்கா அஷ்டோத்தரசத நாமாவளி சொல்லி வழிபடுவதோடு மட்டுமல்ல. “கற்புடை மடற்கன்னி காவல் கொண்ட” என்று ஆழ்வார் மங்களாசாசனம் பண்ணியிருக்கிறார் என்று தல வரலாறும் சொல்வார்.

ஆனால் நமக்குள் சண்டையில்லாவிட்டால் ஸ்வாரஸ்யமேது? தேவிக்கு வெள்ளிதோறும் ஊஞ்சல் நடைபெறும். இரவு பத்துமணி வரை கீதம், நாட்டியம், சோடசோபசார பூஜைகளுடன் பூங்கோயில் தாயார் ஊஞ்சலுக்கு எழுந்தருளுவது வழக்கம் (தேவியின் திருநாமம், வடமொழியில் புஷ்பாலயம் என்றும், தமிழ்மொழியில்பூங்கோயில் தாயார் என்றும் வழங்கும்.) ஊஞ்சல் மண்டபத்தருகே ஒரு பில்வமரம் வெட்ட வெட்டத் தளிர்க்கும். துர்க்கை சந்நிதியையும் ஷை பில்வமரத்தையும் காட்டி ஆதியில் சிவாலயமாயிருந்ததென்றும் பின்னர் வைஷ்ணவர் கைப்பற்றி விட்டனரென்று சைவர் கதைப்பர். இப்பொழுது பில்வமரம் பட்டுப்போய்விட்டது. யார் எந்தக் கதையைச் சொன்னாலும், உலகளந்தாரும் பூங்கோயில் தாயாரும், பக்தகோடிகளை “வாருங்கள் ! வாருங்கள் !” என்று அழைப்பதுபோலவேதான் காட்சியளிக்கிறார்கள், அன்றும், இன்றும்.

இவைமட்டுமேயன்றி மத்வமுனிவர் ஒருவரது சமாதி பெண்ணையின் அக்கரையில் பிருந்தாவனம் என்னும் பெயருடன் வழங்கும். அங்கே தங்கி ஒரு மண்டலம் வழிபடுவோருக்குப் பிணிகள் நீங்குகிறதென்பது பிரத்யக்ஷம்,

---

நந்தவனம் தாரண ஹப ருதுமலர்கள்

தாரண ருதுமலர் தொகுதி முற்றும் சேர்ந்து முழு புத்தகமாக கிளேஸ் பதிப்பு மட்டும் வெளியிடுகிறோம். சுமார் 700 பக்கங்கள்கொண்ட விஷய மேன்மை பொருந்திய இந்த நூலில் சுமார் 100 படங்கள் (பல கலர்களில்) வெளியாகி, அழகுக்கு அழகு செய்து, ஸ்வர்ணத்தில் வைரம் பதித்தது போன்று சோபிக்கின்றன, தனித்தனியே ருதுமலர்களை வாங்காதவர்கள் அதே விலையில் அதாவது ரு. 9/—க்கே இந்த அரிய நூலைப் பெறலாம். மனதுக்கு ஆனந்தம். கண்களுக்குக் கவர்ச்சி. கற்பனைக்குத் தூண்டுகோல். உடனே முந்துங்கள்.

நம் சகோதரிகளுக்கு மட்டும்

ஸ்திரீதனமும் வாரிசுரிமையும்

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

சென்ற இதழ் தொடர்ச்சி

மற்றைய ஸ்திரீதன சொத்துக்களின் வாரிசு கிரமம் எப்படி?

(1) விவாகமாகாத மகள்

(2) விவாகமான, ஆனால் சொத்து இல்லாத பெண். (ஏழைப் பெண்)

(3) விவாகமான, சொத்துள்ள பெண்.

(4) பெண்ணின் பெண்.

(5) பெண்ணின் பிள்ளை.

(6) பிள்ளை

(7) பிள்ளையின் பிள்ளை

இவர்களில் ஒருவரும் இல்லாவிட்டால், அதாவது சொத்துடையவளுக்கு சந்ததியே இல்லாவிட்டால், அவள் யுக்த முறைப்படி (Approved form) விவாகமானவளானால், அவள் கணவனையும், அவனுக்குப் பிறகு அவனுடைய நெருங்கிய வாரிசுதாரர்கள், அதாவது அவனுடைய இன்னொரு மனைவியின் பிள்ளை, பேரப்பிள்ளை, பேரப்பிள்ளையின் பேரப்பிள்ளை, அவனுடைய இதர மனைவிகள், பிறமனைவிப் பெண் பிறமனைவிப் பெண்ணின் பிள்ளை கணவன் தாயார், தகப்பனர், சகோதரன், சகோதரனின் பிள்ளை, பிற சபிந்த சமானோதக (ஒரு தாய் வழி) பந்துக்கள் என வரிசைக்கிரமமாகப் போய்ச் சேருமேயன்றி அரசாங்கத்தைப் போய்ச் சேராது.

ஆனல் சொத்துடையவள் அயுக்த முறைப்படி (Unapproved form) விவாகமானவளானல், அப்பொழுது அந்தவகை ஸ்திரீதனச் சொத்து கன்னிகையின் சொத்துப்போல, தாய், தகப்பன், தகப்பனின் பந்துக்கள் என்ற வரிசைக் கிரமத்தில் போய்ச் சேருமேயன்றி கணவனையும் கணவன் வழி பந்துக்களையும் போய் சேராது.

ஏனென்றால், காந்தர்வம் முதலிய அயுக்த விவாக முறைகளில் 'கன்னியாதானம்' என்ற சடங்கு கிடையாது. ஆதலால், அம்முறைப்படி விவாகமான பெண் தகப்பன் குடும்பத்தையே சேர்ந்தவளாக மதிக்கப்படுகிறாள்.

மிதாக்ஷர முறைப்படி ஸ்திரீதன சொத்தின் வாரிசு கிரமம் பெண்ணின் பெண்களுக்கு வரும்போது, பெண்கள் விஷயத்தில் காட்டப்படுவதுபோன்ற 'விவாகமாகாதவள், விவாகமானவள்' என்ற வித்தியாசம் இல்லாமலே போய்ச்சேருகிறது.

விதந்துவின் ஸ்திரீதனம்

'வயிற்றில் பிறந்த பெண், பெண்ணின் சந்ததி, பிள்ளை, பிள்ளையின் சந்ததி இவர்கள் இல்லாத இடத்தில் விதந்துவின் கணவனுடைய வாரிசுகளை போய்ச் சேருகிறது. அவர்களும் இல்லை என்ருல், தன் சொந்த (ரத்த சம்பந்தம் உள்ள) பந்துக்களுக்குப் போகுமேயன்றி அரசாங்கத்துக்குச் சேராது என்பதை எல்லாமுறைகளும் ஒத்துக்கொள்ளுகின்றன. ஸ்திரீதன சொத்து விஷயமாக எல்லா முறைகளும் ஒத்துக்

183102

கொள்ளும் இன்னும் சிலவற்றைப் பார்ப்போம்.

(1) ஸ்திரீதன வாரிசுதார்கள், ஒரே வகுப்பில், பலர் இருந்தால், அனைவரும் தமக்குள் பொதுவாகப் பிரித்துக்கொள்வது, அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் கூட ஸ்திரீதன சொத்திற்கு பிறப்புரிமை என்பது Survivorship கிடையாது.

உதாரணம்.

ஒரு இந்து ஸ்திரீக்கு இரண்டு பிள்ளைகள்மட்டும் இருக்கிறார்கள். அந்தப் பிள்ளைகள் ஒரு அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர், தாயாருடைய ஸ்திரீதனச் சொத்தை தமக்குள் பிரித்துக் கொள்ளுகின்றனர். எனினும் அவர்களில் ஒருவர் இறந்துபோனால், அவிபக்த குடும்ப சொத்து மற்றவனை சேருவதுபோல், ஸ்திரீதனச் சொத்து உயிருள்ளவனைச் சேராது; இறந்தவனின் சந்ததியையே போய்ச்சேரும்.

(2) இரண்டாம் தலைமுறையில் ஸ்திரீதன சொத்தின் வாரிசுதாரர்கள் தங்களுக்குரிய பங்குவிகித விதம்தான் எடுத்துக்கொள்ள முடியும், தலைக்கொரு பங்காய் பிரித்துக் கொள்ள முடியாது.

உதாரணம்:

ஒரு இந்து ஸ்திரீக்கு இறந்தப் பெண் (ஏ) என்பவள்மூலம் இரண்டு பேரப்பிள்ளைகளும், இறந்துவிட்ட (பி) என்றவள்மூலம் மூன்று பேரப் பிள்ளைகளும் இருக்கிறார்கள். இந்த ஸ்திரீ இறந்துவிட்டால் (உயில் எழுதாமல்) அவள் ஸ்திரீதன சொத்தை இரண்டு பாகமாகப் பிரிக்கவேணும். இறந்துவிட்ட (ஏ) பெண்ணுக்குரிய பாகத்தை அவளுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் பிரித்துக்கொடுக்க வேண்டும். இறந்துவிட்ட (பி) பெண்ணுக்குரிய பாகத்தை அவளுடைய மூன்று பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுக்கவேண்டும். இதுதான் பங்கு விகித முறை.

தலைக்கொரு பங்காகக் கொடுப்பதென்றால் அந்தச் சொத்தை ஐந்து பங்காக பிரித்துத் தலா ஒரு பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் இது சட்டப்படி செல்லாது.

( ) ஸ்திரீதன வாரிசுகளை இரு வகையாகப் பிரித்தல் வேண்டும். 'ஆண், பெண்.' என்று

உதாரணம்: ஆண் வாரிசு:

(1) பிள்ளைகள், (2) பெண்ணின், பிள்ளைகள், (3) பிள்ளையின் பிள்ளைகள் முதலியன,

உதாரணம்: பெண் வாரிசு:

(1) பெண்கள், (2) பெண்ணின் பெண்கள் (3) பிள்ளையின் பெண்கள், முதலியன,

ஸ்திரீதன சொத்துக்கு ஆண் வாரிசு வந்தால், அவர் அந்தச் சொத்தை பூரண உரிமையுடன் எடுத்துக் கொள்ளுவார். அவர் காலத்திற்குப்பின் அது அவருடைய வாரிசுதாரர்களுக்கே போய்ச் சேரும். ஸ்திரீதன சொத்தின் ரூபமே இராது. ஸ்திரீதன சொத்துக்கு பெண் வாரிசு வந்தால் அதை அவள் அனுபவ உரிமைமட்டும் உடையதாக எடுத்துக்கொள்ளுகிறாள். அவள் காலத்திற்குப் பிறகு அது அவளுடைய சொந்த ஸ்திரீதன வாரிசுகளுக்குப் போய்ச் சேராது. அவளுடைய தாயாரின்—அதாவது சொத்துக்கு முதல் அதிகாரியின்—நேர் வாரிசுகளுக்குத் தான் போய்ச் சேரும்.

உதாரணம்: ஒரு தாயாருக்கு 'ஏ' 'பி' இரண்டு பெண்கள். தாய் உயில் எழுதாமல் இறந்துவிட்டாள். ஸ்திரீதன சொத்து (யவுத்தகம்) இருந்தது. அதை அவளுடைய மகள், 'ஏ' 'பி' இருவரும் சமமாகப் பகிர்ந்துகொள்

ளுகிறார்கள். பிறகு அதில் 'பி, இறந்துவிட்டாள். அவளுக்கு வாரிசு முறையில்வந்த ஸ்திரீதன சொத்தை அவளுடைய, பெண், பிள்ளைகள் எடுத்துக்கொள்ள முடியாது. உயிருடன் இருக்கும் அவளுடைய அக்கா 'ஏ'க்கு தான் போய்ச் சேருகிறது. 'ஏ'யின் காலத்திற்குப் பிறகு தான், 'ஏ'யின் மகளுக்கும் 'பி'யின் மகளுக்கும் கிடைக்கிறது. 'பி'க்கு மகள் இல்லாவிட்டால் 'ஏ'யின் மகளுக்கே அனைத்தும் போய்ச்சேருகிறது. பம்பாய் மாகாணத்தில் கையாளப்படும் மயூகமுறைப்படி மட்டும், ஸ்திரீதன சொத்து, பெண் வாரிசுகளுக்கு வரிசைக் கிரமமாக வந்தாலும், பெண்கள் அதையும் மற்ற ஸ்திரீதனம்போல பூரண உரிமையுடனே எடுத்துக்கொள்வார்கள். அவர்களுக்குப் பின் அவர்களுடைய சொந்த வாரிசுக்கே அந்த சொத்து போய்ச்சேருகிறது.

(4) தேவதாசிகள் (நாயிக்கின்) முதலியவர்களுடைய சொத்துக்கு வாரிசு கிரமம்:

தேவதாசிகளின் சொத்துக்களுக்கும் பிற குலமகளின் ஸ்திரீதனச் சொத்துபோலதான், வாரிசு கிரமம். (1) சகோதரன், (2) சகோதரி, (3) சகோதரனின் பிள்ளை இதர தாய் தகப்பன் வழி பந்துக்கள், அவள் விவாகமானவளானால், அவள், (1) கணவன், (2) சக்களத்திபிள்ளை (3) கணவனின் சமீபந்த பந்துக்கள் என்று வரிசைக்கிரமமாக வாரிசுகளைப் போய்ச்சேருகிறது.

ஸ்திரீதன வாரிசு விஷயம் சிக்கலானது ஆகையால் எவ்வளவு விவரித்தும் இன்னும் தெளிவுபடவில்லை. திரும்பவும் சுறுக்கி தெளிவுபட விளக்கிவிடுகிறேன், சென்னை மாகாணத்திலுள்ள நம்மவர் தெரிந்து கொள்ளவேண்டிய அளவிற்கு.

சென்னை மாகாணத்திலே, ஸ்மிருதி சந்திரிகா: பாராசா மாதவ்யா, ஸரஸ்வதி விலாசம், வ்யவஹார நிர்ணயம் என்ற இந்த நான்கு நூல்களே ஆதாரமாக கையாளப்படுகின்றன. இந்த நான்கு நூல்களின் வ்யாக்கியான கர்த்தாக்கள் பரஸ்பரம் பேதப்பட்டுக் கூறும் இடங்களில் சென்னை சர்க்கார் நீதிபதிகள் மிதாக்ஷர முறையையே பின்பற்றி தம் தீர்மானத்தை வெளியிடுகிறபடியால், நீதிபதி, தீர்ப்பைப் பின்பற்றி மிதாக்ஷர முறைப்படி ஸ்திரீதன வகுப்பைச்சேர்ந்த வாரிசு கிரமத்தை விவரிப்போம். வாரிசு நிர்ணயம் செய்வதற்கு மிதாக்ஷர முறைப்படி ஸ்திரீதனம் இரண்டே வகுப்பாகும். (1) சுல்கம் (2) பிற வகையின் ஸ்திரீதனங்கள் என, இப்பொழுது இந்த நவயுகத்திலே (1) 'கன்யா சுல்கம்' என்பதை எவரும் அறியமாட்டார். அது அழிந்துபோய் அதன் இடத்தில் வரசுல்கம்தான் பிராதான்யமாக இருக்கிறது. வரசுல்கம் பிள்ளையையோ, பிள்ளை வீட்டாரையோ சேருகிறதானபடியால், அது எந்தவிதத்திலும் ஸ்திரீதனமாகாது. ('ஸ்திரீதனமாக பெண்ணுக்குத்தான் கொடுக்கிறேன்' என்று கூறி (சாட்சிமுன்) கொடுத்தாலன்றி) ஆகையால் இந்த காலத்தில் நாம் சுல்கத்தைப் பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை.

பிறவகை ஸ்திரீதனங்களில், முன்னே கூறிய (2) யவுத்கம் (3) பர்த்ருதத்தம் அன்வதேயகம், (4) டெக்கனிகல் ஸ்திரீதனம் அனைத்தும் அடங்கும். இதை தவிர (5) ஐந்தாவது வகை (5) டெக்கனிக்கல் அல்லாத ஸ்திரீதனம் என்ற வகையொன்றும் உண்டு. அதை ஸ்மிருதி சந்திரிகா முதலிய முறைகள் ஒத்துக்கொள்ளுவதில்லை. ஆனால்

சென்னை நீதிபதிகள் அதையும் மிதாக்ஷரமுறைப்படி டேக்கவிக்கல் அல்லாத ஸ்திரீதனமாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் அவை (1) ஜிவனும்ச சொத்து (2) விவாகமான வளுக்கு அன்னியரிடமிருந்து கிடைத்த பரிசுகள், தாவ சொத்து இவையாகும்.

இவைகள் அனைத்தும் மிதாக்ஷர முறைப்படி ஒரே வகுப்புக்குள் அடங்கிவிடுகின்றன. மிதாக்ஷர முறைப்படி அவைகளும் (2) பிற வகை ஸ்திரீதனங்களில் சேரும்.

முன்பு கூறியபடி சுல்கத்தை தள்ளிவிடவேண்டும். மேலும், சாஸ்திரோக்தமான விவாகம்அயுக்த விவாகம் என்ற பேதங்கள் இப் பொழுது கிடையாது. எல்லாம் சாஸ்திரோக்தமான விவாகங்களா கவே மதிக்கப்படுகின்றன. ஆகை யால், அந்த பிரச்னையையும் நாம் தள்ளிவிடலாம் ஸ்திரீதன வாரிசு கிரமத்தை நிர்ணயிக்கும்போது.

சென்னை முறைப்படி

ஒருஇந்துகன்னிகை (விவாகமாகா தவள்) ஸ்திரீதன சொத்து வைத்து விட்டு இறந்துவிட்டால், அவளுடைய ஸ்திரீதன சொத்துவகைகள் அனைத் தும் (வாரிசு முறையில் ஆணிட மிருந்தோ பெண்ணிடமிருந்தோ கிடைக்காதது) முதலில் அவளுடைய சொந்த (1) சகோதரனுக்கு உரியது. அவன் இல்லாவிட்டால் (2) தாயார். தாயாரும் இல்லை என்றால், (3) தகப் பன் பிறகு (4) தகப்பன் பந்து (5) தாய்வழி பந்து என்று வரிசைக் கிரமமாகச் செல்லும்.

விவாகமானவளுடைய ஸ்திரீதன வாரிசு கிரமம். உதாரணம் (1)

''ஒரு இந்து தாயாருக்கு பூரண பாத்யதையை உடைய சில ஸ்திரீதன சொத்து வகைகள் இருந்தன. (சுல் கம் நீங்கலாக) அவள் உயில் எழு தாமல் இறந்து விட்டால் அச்சொத் துக்கள் யாரைச்சேரும்?''

அவளுக்கு, விவாகமாகாத பெண் ஒருத்தியும், விவாகமானவர் ஐவரும்' ஒரு பிள்ளையும் இருக்கிறார்கள். அப்பொழுது அவர்களில், விவாக மாகாத பெண் ஒருத்திதான் அவளு டைய முதல் வாரிசு ஆகமுடியும் அந்தச் சொத்துக்கு. விவாகமாகாத பெண் இறந்து விட்டால், விவாக மான மற்றய பெண்களில் எவள், சொத்தற்றவளோ — அதாவது விவாக காலத்தில் யாதொரு சொத் தும் பெறாதவள் — அவளே (2) வாரி சாக வருவாள். அவளும் இல்லை என்றால் தான் விவாகமான, சொத் துள்ள, மற்றப் பெண்கள் தமக்குள் அதைப் பகிர்ந்து (சமமாக) கொள்ள வேண்டும். உதாரணம்: (2) அவர் களும்போய்.

ஒரு விவாகமான இந்து ஸ்திரீக்கு (சென்னை மாகாணத்தைச் சேர்ந்த வள், சில ஸ்திரீதன சொத்துக்கள் (சுல்கம் நீங்கலாக) இருந்தன. வாரிசு கிரமமாகவந்ததல்ல. பூரண உரிமை யுடன் கூடியது. அவள் உயில் எழு தாமல் இறந்து விட்டாள். அவளுக்கு பெண்கள் இல்லை. இறந்து போன பெண்ணின் பெண்ணும், இறந்து போன பெண்ணின் பிள்ளையும், இருந்தனர். அவர்களில் யாருக்குச் சொத்து சேரும்?

இறந்துபோன பெண்ணின் பெண்தான் அந்த ஸ்திரீதன சொத் துக்கு வாரிசு ஆவாள். அவளுக்குப் பிறகே, பெண்ணின் பிள்ளைக்குப் போகும். இவ்விருவரும் இல்லாவிட் டால்தான், சொந்த பிள்ளைக்குப் போகும்.

உதாரணம்: (3) ஒரு ஸ்திரீ இறந்து விட்டாள், சில ஸ்திரீதன சொத்துக்களை வைத்து விட்டு. அவ ளுக்கு, விவாகமானவர்களும்,

விவாகமாகாதவர்களுமான சில பெண் வயிற்று பேத்திமார்கள் மட்டும்தான் இருந்தார்கள்.

அப்பொழுது அவர்கள் அனைவரும் அச்சொத்தில் தத்தம் தாயாருக்கு உரிய பாகத்தை எடுத்து, தமக்குள் பிரித்துக் கொள்ள வேண்டும். இரண்டாம் தலை முறையில், விவாகமானவள், விவாகமாகாதவள் என்ற வித்தியாசம் பாராட்டப் படுகிறதில்லை. உதாரணம் : (1) ஒரு இந்து ஸ்திரீக்கு ஒரு விவாகமான பெண்ணும். இறந்து விட்ட பெண்ணின் பெண் இருவரும் இருந்தனர் பூரண உரிமையுடைய ஸ்திரீதன சொத்து இருந்தது. (வாரிசுகிரமமாக வந்ததன்று) அந்த ஸ்திரீ உயில் எழுதாமல்] இறந்து விட்டாள். அப்பொழுது அவளுடைய சொத்து முழுமைக்கும் வாரிசு உயிருடன் இருக்கும் அந்த ஒரே பெண்தான். இறந்து விட்ட பெண்ணின் பெண்கள் இருவருக்கும் சொத்தில் பாகம் கிடையாது. பெரிய தாயார் காலத்திற்குப் பிறகு அச்சொத்தில் தன் தாயாருக்கு உரியபங்குக்கு பாத்யதை ஏற்படும் பேத்திமார்களுக்கும் இதே சொத்து (ஸ்திரீதனம்) இரண்டாம் தலை முறையில் வாரிசுகிரமமாக ஏற்படுகிற சொத்தாக மாறிவிடுகிறபடியால். தாயார் பங்குக்கு பெரியதாயார் பெண்களுடன் போட்டியிடும் பாத்யதை ஏற்படுகிறது பிறகு. பிறப்புரிமை ஸ்திரீதன சொத்துக்கு இல்லையாகையால் முதலில் உரிமை கிடையாது.



சூடாமணி

சம்பு ஐயரின் பட்டாணிப் பயிர்

நதியைக் கடந்து மறுகரை சேர்ந்த சம்பு ஐயர் தம்முடைய மனைவிக்கு ஒரு சீட்டு எழுதி ஒரு காக்காய் அக்காளிடம் கொடுத்தனுப்பினர். சம்பு ஐயருடைய மனைவியும் பிள்ளைகளும் ஒருவருக்கும் தெரியாமல் புறப்பட்டு நதிக்கரைக்கு வந்து தேரையாருக்குப் பணம் கொடுத்து மறுகரை சேர்ந்தார்கள். சம்பு ஐயர் தம் மனைவி மக்களோடு அங்கே ஒரு குடிசை கட்டிக்கொண்டு வாழ்ந்துவந்தார். மறுகரையில் இருந்த நிலமெல்லாம் அவருக்கே மானியமாகக் கிடைத்துவிட்டதுபோல எண்ணிக்கொண்டார்.

கரடிராயரும் கோணப்பல்லரும் நதியில் பாலம் இருந்த வழியாகச் சுற்றி அலைந்து நரி அண்ணு குடிசை கட்டிக்கொண்டு வாழ்ந்த இடத்திலிருந்து கொஞ்ச தூரத்துக்கு அப்பால் குடிசைகள்

கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள். கொஞ்ச நாளைக்கெல்லாம் அவர்களுடைய குடும்பத்தார்களும் வந்து சேர்ந்தார்கள்.

சிங்கமகாராஜா சம்பு ஐயரையும் அவருடைய தோழர்களையும் பிடிக்கத் தவறின குற்றத்திற்காக முயல் அண்ணாவை ராஜ்யத்தில் இருந்து வெளியேறும்படிக் கட்டளை யிட்டுவிட்டார். ஆகையால் முயல் அண்ணா தம்முடைய குடும்பத்தோடு நதியைக் கடந்து சம்பு ஐயர் குடியேறின நிலத்துக்குப் பக்கத்தில் ஒரு நிலத்தைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு வாழத்தொடங்கினார்.

முயலண்ணாவுக்கு நாலு பக்கமும் தோட்டங்களுள்ள பெரிய வீடு கட்டிக்கொண்டு வாழவேண்டும் என்று ரொம்ப ஆசை. ஆனால் பணத்துக்கு எங்கே போகிறது? அவருக்கு ஒரு வழியும் புலப்படவில்லை.

முயலண்ணா பக்கத்து நிலத்தில் குடியிருந்தது நரி அண்ணாவுக்குப் பிடிக்கவில்லை. அதனாலே அவர் முயலண்ணாவிடம் அந்த நிலத்துக்கு விலைபேசி, ஐம்பது ரூபாய்க்கு விலைக்கு வாங்கினார். அந்த நிலத்தைச்சூழ மரச் சட்டங்களை நட்டு வேலி யடைத்தார். அந்த நிலத்தில் பட்டாணிப் பயிர் போட்டார்.

முயலண்ணா அந்த நிலத்துக்கு வடபக்கத்து நிலத்துக்குப்போய் குடிசைப் போட்டுக்கொண்டு வாழத் தொடங்கினார். முயலண்ணா தமது நிலத்துக்குப் பக்கத்தில் இருப்பது கூடவே கூடாது என்று நினைத்தார் சம்பு ஐயர். உடனே அந்த நிலத்தையும் விலைக்கு வாங்கி அங்கேயும் பட்டாணிப் பயிரிட்டார்.

முயலண்ணா புதிசு புதிசாகக் குடிசைகள் போடுகிறதும், சம்பு ஐயர் 50, 50 ரூபாயாக விலைகொடுத்து வாங்குகிறதும் வழக்கமாகி சம்பு ஐயருடைய பட்டாணிப் பயிர் வெகு தூரம் பரவியதைப் பார்க்கப் பார்க்க முயல் மாமிக்குக் கோபம் பொங்கியது.

ஒரு நாள் காலையில் முயலண்ணா பக்கத்து ஊரில் ரேடியோ நிலயத்துக்குப்போய் வீணைக் கச்சேரி ஒன்று ஒலி பரப்புவதற்காக வீணையில் சாதகம் பண்ணிக்கொண்டிருந்தார். முயல் மாமி உள்ளே வந்து "போதும். நிறுத்துங்கள் உங்கள் வீணைக் கச்சேரியை. டஜன் கணக்கிலே பிள்ளைகளைப் பெற்றுவிட்டு, இப்படி வீணை வாசித்துக்கொண்டிருந்தால் குடித்தனம் நன்றாய் நடக்குமே" என்றாள். அதற்கு முயலண்ணா, "ஏன் இப்படி கோபித்துக் கொள்கிறாய்?" என்றார்.

"கோபித்துக் கொள்ளுகிறேனா? நன்றாய் இருக்கிறது. ஒவ்வொரு நிலமாக விற்று விற்று இப்படி எத்தனை நாள் காலம் தள்ளலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்களும் சம்பு ஐயரைப்போல நிலத்தை வேலியடைத்துப் பயிரிடுகிறதுதானே! அவரைப் பாருங்கள். நீங்கள் விற்ற நிலங்களிலெல்லாம் பட்டாணிப் பயிர் செய்திருக்கிறார். பட்டாணிக் காய்கள் கண்ணைப் பறிக்கின்றன" என்றாள் முயல் மாமி.

"பட்டாணிப் பயிரா? எங்கே போட்டிருக்கிறார்?"

"எங்கேயா, நீங்கள் விற்ற நிலங்களிலேதான்."

"இன்று முதல் நம்முடைய வீட்டில் தினந்தோறும் பட்டாணிக் கறிதான்" என்று சொல்லிவிட்டுத் தம்முடைய பிள்ளைகள் எல்லோரையும் பார்த்து, "குழந்தைகளா, பட்டாணி தின்பதற்காக வயிற்றை காயப்போட்டுவையுங்கள்" என்றார்.

"திரும்பவும் உங்கள் வெட்கம் கெட்ட பிழைப்பை ஆரம்பிக்கப் போகிறீர்களோ?"

"உளறாதே. அவன் லோபி, மற்றவர்கள் என் நிலங்களை அதிக விலைக்கு வாங்காமல் தந்திரம் பண்ணி ஒவ்வொரு நிலத்தையும் ஐம்பது ரூபாய்க்கு வாங்கினான். என்னிடமிருந்து வாங்கின நிலங்களிலே பயிரிடுகிற பட்டாணிகளில் ஒரு பிஞ்சுப் பட்டாணிகூட அவன் தின்னப்போறதில்லை. பார்க்கிறேன் ஒரு கை. ஒரு தம்பிடி கூட என்னிடம் இருந்து வாங்காமல் அந்த நிலங்களை அவன் என்னிடம் தராவிட்டால் நான் என் பெயரை மாற்றி வைத்துக்கொள்ளுகிறேன். அவனை அழவைக்கிறேன்" என்று சொல்லி வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

நரி மாமி சில நாட்களுக்குப் பின் அழுதுகொண்டே தன் புருஷனிடம் வந்து,



"நீங்களோ, உங்கள் தோட்டமோ? போதுமே, நீங்கள் தோட்டம் போடுகிற அழகு! ஒரு பிஞ்சுப் பட்டாணிகூட இல்லை. எந்தத் திருட்டுப் பயலோ வந்து பட்டாணிகளைத் திருடிக்கொண்டு போகிறான்" என்று முறையிட்டாள்.

"அதற்காக என்னத்துக்கு அழுகிறாய்?" என்றார் சம்புஐயர்

"அழாமல் சிரிக்க வேணுமா?" முயலண்ணாவிடமிருந்து வாங்கின எந்தத் தோட்டத்தில் பயிரிட்டு நாம் வாழ்ந்தோம்? அவன் உங்களை ஏமாற்றி ஏமாற்றி நிலங்களை விற்கிறான். நீங்களும் வாங்கி

வாங்கித் தோட்டம் போடுகிறீர்கள். ஆனால் தோட்டத்தில் போடுகிற பயிரை எல்லாம் அனுபவிக்கிறவனே, அந்தத் தந்திரக்காரன் தான்" என்றாள் நரிமாமி.

"அவனா திருடுகிறான்?"

"என்ன சந்தேகம்?"

"அவன் காலடி ஒன்றும் தெரியவில்லையே.

"அடிச் சுவடை எல்லாம் துடைத்துவிட்டுப் போகிறான்.

"அப்படியா நான் அவனைக் கொல்லாவிட்டால் என் பேர் சம்பு ஐயர் இல்லை"

"இப்படி எத்தனையோ தடவை சொல்லுகிறீர்கள். உங்கள் வாய் ஜம்பம் அவனிடம் பலிக்காது. இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?"

என்ன செய்யப் போகிறேனா? வேலி ஓரத்தில் ஒரு இடத்தில் ஒரு சட்டம் உடைத்துத் திறந்திருக்கிறது என்று காட்டினாயே, அந்த இடத்தில் நிற்கும் அசோக மரத்தில் உச்சாணிக் கிளையில் ஒரு கயிற்றைக் கட்டி, அந்த கயிற்றின் நுனியில் ஒரு சுருக்கைப் போடுவேன். அந்தக் கிளையை வளைத்து சுருக்கை திறந்திருக்கும் வேலிச் சட்டத்தில் லேசாகக் கொடுத்து வைப்பேன். திருடன் நுழைவான். சுருக்கில் மாட்டிக்கொள்வான். கிளையும் நிமிரும். கயிற்றிலே தொங்குவான்"



"பார்க்கலாம் இந்தத் தடவை உங்கள் திறமையை."

முயலண்ணாவைப் பிடிக்க சம்பு ஐயர் அசோகமரத்தில் பொறியெல்லாம் தயார் செய்துவிட்டார். அன்றைக்கு சாயங்காலம் முயலண்ணா பட்டாணி திருட நுழைந்தார். சுருக்கில் அகப்பட்டார். மரத்தில் தொங்கினார்.

அப்பொழுது காடிராயர் அந்தப் பக்கமாக வந்தார். சிங்கயகாராஜாவின் நாட்டில் இருந்து வந்தது முதல் காடி ராயர் ஒரு பெரிய பக்தி இயக்கத்துக்குத் தலைவராகிவிட்டார். அவர் ஒரு பரம பாகவதனைப் போல வேஷம் போட்டுக்கொண்டு,

"எல்லாம் சிவமயமே.
எல்லாம் சிவமயமே.
இந்த ஜகமெல்லாம் சிவமயமே"

என்று பாடிக்கொண்டே வந்தார்:

உலகத்திலேயே இந்த சேவைக்கு மிஞ்சியது வேறு எதுவுமே இல்லை எனலாம். என்ன த்யாகம்! எத்தனை வீரம்! எவ்வளவு பரோபகாரமான சேவை... அடாடா!... அவர்கள் ஒரே சமமாய் காலடி போட்டு நடக்கும் அழகும் கைத்துப்பாக்கிகள் ஒரே நிலையில் அசையாமல் நிற்கும் காக்ஷியும் பார்ப்பதற்கு வெகு மனோகரமாயிருப்பதோடு அவர்களுடைய புரளாத மன உறுதியையும், காரியத்தின்மீது கண்ணுவிருக்கும் ஒரே த்ருஷ்டியையும் உள்ளத்தில் கொந்தளிக்கும் தேசபக்தியையும் இது வெகு தெளிவாய் எடுத்துக்காட்டுகிறதல்லவா? ஆஹா!...அவர்களின் முகத்தில்தான் எத்தகைய தேஜஸும் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரமும் ஜ்வலிக்கின்றன பார்த்தாயா?... சுலோசனு! இப்படி வந்துதான் பாரேன்... பகவான் அவர்களுக்கு ஜெயத்தைக்கொடுத்து ரக்ஷிக்க வேண்டும்... என்று ரகுநாதன் தன் மனைவியைப்பார்த்தும் வீதியில் செல்லும் ராணுவ பட்டாளத்தைப் பார்த்தும் கூறினன்.

சுலோசனு இந்தப் பட்டாளத்தையும் பார்க்கவில்லை. தன் கணவனின் வார்த்தையையும் காதில் வாங்காது நிலைக்கண்ணுடிக்குமுன் நாட்டியமாடியவாறு அந்த அழகைத் தானே பார்த்துக்கொண்டு "சொல்ல

வல்லாயோ! கிளியே! சொல்ல நீ வல்லாயோ" என்ற அடிகளை திரும்பத்திரும்பப் பாடி அதற்கான அபிநயங்களை விதவிதமாகச் செய்வதிலேயே லயித்திருந்ததால் கணவனுக்குப் பதிலே சொல்லவில்லை.

இரண்டு மூன்றுதரம் சொல்லியும் சுலோசனா காதில் வாங்காததால் ரகு தடதடவென்று அவள் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு மாடி வராண்டாவில் வந்து நின்று "அதோ பாரேன்! சுலோசனா! நீ நாட்டியத்தில் காலடிபோடும் அழகைவிட இவர்கள் நடக்கும் அழகைப் பார்த்தாயா?... என்று கூறுவதற்குள் ஒருதிமிர் திமிரிக்கொண்டு சுலோசனா உள்ளே ஓடியவாறு, "அப்பப்ப! சுத்த நாட்டுப்புறமாயிருக்கிறது. நாட்டியத்தின் அருமை பெருமை தெரியாது; அதில் லயித்திருப்பவர்களைக் கலைப்பதுதான் தெரியும். சிப்பாயுமாச்சு... கிப்பாயுமாச்சு. வேண்டுமானால் நீங்கள் விழுந்து விழுந்து பார்ப்பதுதானே!" என்று முணுமுணுத்தவாறு மறுபடியும் கண்ணாடியின் முன்புநின்று "சொல்லவல்லாயோ... என்று மதுரத்வனியில் ஆரம்பித்தாள். ஆனால் முகத்தில் அதற்கான பாவம்வராமல் கோபமே ஜ்வலித்தது.

அந்த பாட்டுக்கேற்ற பாவத்தை வெகுப்ரயாஸைப்பட்டுவரவழைக்க முயற்சி செய்தும் அது உபயோகப் படாமல்போனதால் கணவன்மீது பின்னும் பலமான ஆத்திரமும் அவன் சுத்த மடையன், கர்னாடகம் நாட்டுப்புறம், ரஸிகத்தன்மையற்ற ஜடம், கலையின் ஆர்வமறியாத கசடன் என்றதுபோன்ற பதங்கள் அவளுடைய இதயத்தகட்டில் மாறி மாறி ஜ்வலித்து அவளுடைய கோபக் கனலைப் பின்னும தூண்டி விட்டதால் சடக்கென்று ஆட்டத்தை நிறுத்திவிட்டு தடாரென்று சோபாவில் விழுந்து குப்புறப்படுத்தாள்.

எக்காரணம் பற்றியோ, அவளுக்கு அழுகையழுகையாய்வந்தது. கணவன் தனது கலைக்குச் சத்ருவாகவே அமைந்தது போன்ற ஒரு பெரிய அதிர்ச்சி அவள் இதயத்தில் விலக்கமுடியாதபடி ஆழமாகப் பதிந்து வதைக்கத் தொடங்கியது.

சுலோசனா பெரிய செல்வவந்தரின் செல்ல மகள். அவள் பிதா பெரிய மிராசுதார். அதோடு உத்யோகஸ்தரும்கூட. தற்கால நாகரிகத்தில் மூழ்கி மோகம் தலைக்கேறியவர் ஆதலால் தமது பெண்களை ஆண் பிள்ளைகளுடன் சமமாகப் படிக்க வைத்ததோடு நாட்டியக்கலையில் மூத்த மகளான சுலோசனாவை வெகு திறமையுடன் பழக்கிப் பல விடங்களில் ஆடச்செய்து உள்ளம் பூரிப்பார்.

பெண்ணுக்குரிய அடக்கம், பொறுமை, நிதானம், சாந்தம் முதலியன குணங்களை, அவள் நாட்டியமாடும்போது பாவத்தில் காணலாமேயன்றி நேரில் சுடுகளவு கூடக் காணமுடியாது; அதேமுறையில் வளர்த்துவிட்டார்.

பெரிய உத்யோகஸ்தர்களின் வீடுகளில் கல்யாணம்; டீபார்ட்டி முதலிய விசேஷங்களுக்குத் தமது மகளைத் தாமாகவே நாட்டியமாட ஏற்பாடு செய்து ஆர்ப்பரிப்பார். சிலசமயம் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்ற ஆடவனுடன் கூடச்சேர்ந்து ஆடவும் பழக்கினார். பெரிய மனிதர்கள் எத்தனையோ பேர்கள் மெடல்களும் கோப்பைகளும் கொடுத்து கவுரவித்திருக்கிறார்கள். இதைப்பார்த்தே அவள் பிதா உள்ளம் பூரித்து விடுவார். நல்ல கலாரசிகனாகப் பார்த்துத் தன் பெண்ணை விவாகம்

செய்து கொடுக்க வேண்டுமென்று மட்டும் அவர் தீர்மானித்திருந்தார்.

அவர் மனைவியும், நல்ல ரசிகனுடன் மட்டுமில்லாமல் நம் கைக்குள் அடங்கிய சரக்காய் இருந்தால் நம்ம வீட்டுடன் கிடப்பான். கல்யாணமாகியபின்னரும் நாட்டியக் கலை க்ஷீணித்து விடாமல் விருத்தியடைந்து வரும் என்று நினைத்தாள். தற்காலத்திலுள்ள சில கனவான்களைப்போல் கல்யாணமே செய்யவேண்டாம்; இஷ்டப்பட்டவர்களை இஷ்டமானபோது கல்யாணம் என்கிற ஏணியில் ஏற்றி ஒரு நாடகம் நடத்தி விடலாம் என்கிற மனோபாவம் அந்த தம்பதிகளிடம் கிடையாது.

பெண்ணுக்காயினும் ஆணுக்காயினும் காலாகாலத்தில் சரியான முறையில் கல்யாணத்தைச் செய்வதுதான் உசிதம் கல்யாணமாகிய பிறகு அவர்கள் தம் தம் இஷ்டப்படி கலையை வளர்க்கட்டும் என்கிற கொள்கைகளைக் கொண்டவர்களாதலால் S.S.L.C. பாஸ் செய்த உடனேயே விவாகத்திற்கு வரன் தேட ஆரம்பித்தார்கள்.

சுலோசனாவின் ஜாதகத்தில் பூர்ணமான செவ்வாய் தோஷமிருப்பதால் அதற்குத் தக்க தோஷமுற்ற ஜாதகம் கிடைப்பதே துர்லபமாய் விட்டது. பெண்ணைப் பிறப்பித்த பகவான் ஒரு ஆணையும் பிறப்பித்துத் தானே இருப்பான் என்கிற தத்வம் தெரிந்தும் கவலையும் அலைச்சலும் விடுகிறதா? அதுதான் இல்லை.

தோஷம் பரிபூர்ணமாயும் பொருத்தமாயுமுள்ள சில ஜாதகங்கள் கிடைத்தும், "அடேயப்பா! எப் ஏ. படிக்கும் பெண் எங்களுக்கு வேண்டாம். படித்த பெண் குடித்தனப்பாங்கிற்கு உதவாது என்றும் நாட்டியக்காரி எனக்கு வேண்டாம். ...தேவடியாள் சிறுக்கிபோல் ஆடும் கூத்தாடும் பெண் எனக்கு வேண்டாம் என்றும் பெரிய மறுப்பும் திரஸ்காரமும் ஏளனச் சொல்லும் கிளம்பின.

இந்த அம்சங்களுக்கு இஷ்டப்பட்டுச் செய்துகொள்வதாக வருபவர்களுக்குஜாதகம்நிர்த்தோஷமாயிருப்பதால் அந்தவரன்களுக்கு கொடுக்க சுலோசனாவின் பிதா மிகவும் பயந்தார். தன் பெண்ணின் தோஷத்தை மூடி மறைத்து விவாகம் செய்ய அவர் ஒப்பவில்லை. அம்மாதிரி செய்தால் பெண்ணின் வாழ்நாளே பாழ்நாளாகி விடும் பயங்கரம் அவரைப் பூர்ணமாக பாதித்ததால் அதற்கெல்லாம் சம்மதிக்கவில்லை.

ஒரு தினம் கலெக்டரின் பெண் கல்யாணத்திற்கு நடத்த டீபார்டியில் சுலோசனா நாட்டியமாடிய போது கலெக்டர் ஆபீஸிலிருந்த அனேக உத்யோகஸ்தர்கள் வந்திருந்தார்கள் அவர்களில் நமது ரகுநாதனும் ஒருவனென்றுக் கூறவேண்டுமா! அவன் அவ்வாபீஸில் ரூ 75 சம்பளத்தில் இருக்கும் ஒரு சாதாரண உத்யோகஸ்தன். தாய் தகப்பனற்ற பரதேசி. மாமாவால் வளர்க்கப்பட்டு ஏதோ சொல்ப சொத்துக்களையும் விற்று B. A. வரையில் படித்துப் பட்டம் பெற்று உத்தியோகத்திலும் அமர்ந்தான்.

மாமாவும் அவனுக்கு விவாகத்தைச் செய்துவிட ப்ரயத்தனம் பண்ணியும் அங்காரக தோஷமே குறுக்கிட்டுத் தள்ளிக்கொண்டு வந்தது. காக்காய் ஏறியதும் பனம்பழம் விழுந்ததும் என்பதுபோல் ஓரிடத்தில் பெண்ணையும் ஓரிடத்தில் பிள்ளையையும் சிருஷ்டித்துள்ள கடவுள் அவர்களைக் கூட்டிவைக்க ஒரு சந்தர்ப்பத்தையும் காட்டாமலா போவான்?

சுலோசனா வெகு அழகி. கலையில் கொண்ட ஆர்வத்தினால் நாட்டியத்திலும் மிக்க தேர்ச்சிபெற்று மின்னும் அழகாய் விளங்கினாள். படிப்பு, அந்தஸ்து எல்லாம் ஒன்றுகூடி அவளுடைய இயற்கையழகைத் தூக்கிப் பதின்மடங்காக ப்ரகாசிக்கச் செய்தன. அச் சௌந்தர்ய ப்ரதிமையைக் கண்டு ரகுநாதன் மனம்நிறைந்த தூய ப்ரேமையைக் கொண்டு களித்தான்.

கலெக்டரின் அன்புக்குப் பாத்திரமாயிருந்ததால் வெகுவிரைவிலேயே இவர்களுக்கு விவாகம் நடைபெற்றது. விவாகமாகிய பிறகு ரகுநாதனைத் தன் வீட்டோடு இருக்கும்படியாக வற்புறுத்தினார்கள். ரகுநாதன் பரம ஏழையாய், மக்கள் மனிதர்களற்ற அனாதரவான நிலைமையில் இருந்தபோதிலும்கூட அவன் தன் சுய மரியாதை, சுய மதிப்பு, முதலியவற்றைச் சிறிதும் இழந்தவனன்று.

தனக்குள்ளவரையில் எவ்வித மான குறையுமின்றி சந்தோஷமான வாழ்க்கையைத் தனித்து நடத்துவதிலேயே அவனது ஆசை சுழன்று சென்றதேயன்றி மாமனார் வீட்டில் மரியாதைகெட்டு அடிமைபோல் இருப்பதற்கு அவன் சிறிதும் விரும்பவே இல்லை. சுலோசனாவுக்கோ, தன் தகப்பனார் வீட்டிலிருக்கவும், தனது நாட்டியக்கலையின் திறமையில் உச்சத்தையடையவும் அதற்கான வகையில் வாழ்க்கை நடத்தவுமே அவளுடைய ஆசை ப்ரவாகமாகப் பொங்கியது.

விவாகமாகிய பிறகு மரியாதைக்காக ஒரு வாரம்மட்டும் மாமனார்வீட்டில் தங்கினான். சுலோசனாவின் சிநேகிதைகளும் நாட்டியத்தில் அபிமானங்கொண்டவர்களும் கல்யாணம் விசாரிக்க ஓயாது வந்து கொண்டிருந்ததாலும் சதாவிருந்து விருந்து என்று சுலோசனாவை அழைத்துப்போய் விடுவதாலும் அவள் ரகுநாதனிடம் ஒரு நிமிஷம் கூடத் தனித்துப் பேசவும் மகிழவும் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை.

ஓயாமல் புத்தகங்களும் பத்திரிகைகளும் படிப்பது, ரேடியோ வைப்பது, கிராமபோன் வைப்பது, முதலிய வகையில் பொழுதைக் கழிக்க அவனால் முடியவில்லை. மாமனாரும் மைத்துனர்களும் தம் தம் அலுவல்களைக் கவனித்தார்களேயன்றி சதா மருமகப்பிள்ளையாண்டானுடன் உட்கார்ந்திருக்கவில்லை.

ரகுநாதனுக்கு ஒரு மாதம் லீவு கிடைத்திருந்தும் தனியாக ஏக்கம் பிடித்ததுபோல் புதிய ஊரில் புதிய இடத்தில் பொழுதுபோகாததால் அவன் ஊருக்குக் கிளம்பிவிட்டான். மனைவியையும் உடன் அழைத்துச்செல்ல மிகவும் ஆசைப்பட்டான். தன்னை இவ்வளவுதூரம் முன்னுக்குக் கொண்டுவந்தமாமன், மாமியிடம், தன் மனைவியை சில காலமாவது கூட வைத்திருந்து சந்தோஷப்படுவதற்கு அவன் உள்ளம் விரும்பியது.

ஆனால் மனைவியிடமிருந்தும் மாமனாரிடமிருந்தும் கிடைத்த பதில் அவனை அதிரச்செய்துவிட்டது. 'உனக்கே வேலையை இங்கு நான் மாற்றிவிடுகிறேன். இனி நீ இங்கேயேதான் இருக்க வேண்டும். அந்த அநாகரிகக் கிழங்களிடம் இவள் இருக்கமுடியாது'...என்பதே

ரகுவின் மனது துணுக்குற்றது. அவன் "சரி...என் வேலையை மாற்றிக்கொண்டு நான் இங்கிருக்க முடியாது. எனக்கு அந்த ஊரில் இருக்கத்தான் ப்ரியம். ஆகையால் நான் போய்வருகிறேன்" என்று மிக்க சாந்தமாய்ப் பதில் சொல்லி

விட்டு மறுநாளே மாமன் மாமியிடம் வந்து சேர்ந்து வாங்கிய லீவை ரத்துசெய்துவிட்டு ஆபீஸுக்குப் போகத் தொடங்கினன். கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் ப்ரம்மாச்சாரி என்கிற பழமொழி அவனுக்கே சரியாகி விட்டதே என்கிற கவலையால் இவர் களின் உள்ளம் உருகியது...

2

மாதங்கள் ஒன்றிரண்டாகி நான் கும் ஆய்விட்டன. நல்லதை எண் ணிச் செய்த காரியம் நஞ்சாகிவிடும் போலிருக்கிறதே! நல்ல வயது வந்த யௌவன வாலிபன் இம்மாதிரி இருப்பது மகாபாவமாயிற்றே! என்ன செய்வது? அவர்களிஷ்டப் படியே அங்கேயே போய் இருந்து விடு என்றாலும் கேட்கமாட்டேன் என்கிறனே!'' என்று கிழவர் சதா மனம் வருந்துகிறார்.

இங்கு நாட்டியம்; அங்கு நாட்டி யம். அந்த நாட்டியக்காரனுடன் ஜோடி நாட்டியம் ஆடி மிக்க புகழ் பெற்றாள். தங்கப் பதக்கங்கள் கிடைத்தன என்பது போன்ற விஷயங்களை தினம் தினம் பத்திரி கையில் பார்க்கப் பார்க்க கிழவரின் மனது கட்டு மீறி தவிக்கத்தொடங் கியது, கலே, கலே என்று கூறிக் கொண்டு கணவனையே திரஸ்கரித்து விடுவாள்போலிருக்கிறதே! என் கிறதிகில்கூட உண்டாகியதால்அவர் ஒரு விதமான முடிவுக்கு வந்தார்.

மாமனாரின் ஊருக்கே வேலையை மாற்றி தனி வீடு அமர்த்தி நாகரிக வசதிகள் செய்து சுலோசனவைத் தானே நேரில் போய் அழைத்து வந்து தனிக் குடித்தனம் ஏற்படுத்தி தானும் தன் மனைவியும் க்ராமத்தை நேரில் பார்த்துக்கொள்வதற்குப் போவதுபோல் மெல்ல விலகிக் கொண்டார்.

ரகுநாதனுக்கும் இந்த தந்திரம் தெரியும். இதைத் தவிர வேறு வழி யில்லை என்பதையும் மனைவி கலே யில் அளவற்றை ஆசையைக் கொண்டிருந்த போதிலும் மற்றொரு ஆடவனுடன் கைகோர்த்துக் கொண்டு ஜோடி நாட்டியம் ஆட மனம் சகிக்காமல் போனதாலும் மாமாவின் மனம் கோணுமலிருப்ப தற்காகவும் ஒப்புக்கொண்டான்.

ரகுநாதனின் சம்பளம் 75 ரூபாய் தான். வீட்டுவாடகை 30 ரூபாய். சமயல்காரியின் சம்பளம் 15 ரூ. வீடு பெருக்கவும் மற்ற வேலை செய்யவும் வேலைக்காரிக்கு 5 ரூ பாய். ஆகமொத்தம் 50 ரூபாய் செலவானல் மிச்சம் 25 ரூபாயில் எப்படி சம்ஸாரம் செய்வது? தகப்ப னர் மாதம் 100 ரூபாய் அனுப்புவ தால் மற்ற நாகரிக தடபுடலுக்கு கைசறுக்காமலிருந்தது. ஆனல் ரகு நாதனுக்கு மாமனாரிடம் ரூபாய் பெறுவது பிடிக்கவில்லை. உகைத் தவர்களைப்போல் தாங்களே சிக் கனமாகச் செய்துவந்தால் எத்தனை யோ உயர்வாகக் குடும்பம் நடத்த லாமே. என்று மனது ஏங்கியது.

உம்...ஏதோ இன்னும் சில காலம்பார்க்கலாம்என்றுபொறுத்து வந்தான். இத்தனை பொறுமைக் கும் காரணம் சுலோசனவின் அதி மாதுர்யமான சங்கீதமும் நாட்டிய மும் சௌந்தர்யமுமேயாகும். ரகு வுக்கும் நாட்டியத்தில் அபாரமான ப்ரேமைதான். ஆனல் அதற்கே அடிமையாகிக் குடும்பத்தைக்கூட மறந்துவிடும் அதீதத்தை அவன் வெறுத்தான்.

சுலோசனவின் கலைப்பித்தும் ஆடம்பரமோகமும் அவனை, தான் ஒரு சதி; தனக்குப் பதி என்கிற தெய்வம்ஒன்றுஉண்டுஎன்பதையே மறக்கச்செய்து விட்டதால் சதா

சர்வதா அவள் இஷ்டப்படி சுற்று வதும் சிறுபிராயத்தைப்போலவே ஆடுவதுமாக விருப்பதை ரகு வெறுத்து...!"சுலோசனு! கலைக்கு மட்டும் நீ அடிமையாயிருப்பதுடன் குலத்திற்கும், குடும்பத்திற்கும் நீ கடமைப்பட்டவள் என்பதையும் மறக்கக்கூடாது. இனி நீ இப்படி பகிரங்கமாய் கண்டவனுடனும் நாட்டியம் ஆடுவதை நான் விரும்பவில்லை. உன் கலையை நீ ஆதரிக்க நானும் துணைபுரிவேன். ஆனல் அதை நீ தொழிலாக்கிவிட நான் ஆதரவளிக்கமாட்டேன். நீயும் குடும்பத்தலைவியாகி பொதுநலவாக் கைப்பெற்று ப்ரகாசிக்க என்மனம் பறக்கிறது....என்று ஒருதரம் சொல்லிவிட்டான்.

அந்த விபரீதச்சொல்லுக்காகக் கோபித்துக்கொண்டு ஒரு வாரம் உண்ணுவ்ருதமும் அழுகையும் ஆர்ப்பாட்டமும் வீட்டில் ரகளேயும் ஆரம்பமாகிவிட்டது கண்டு ரகுவின் உள்ளம் எப்படித்தானிருக்கும்? மனைவியின் முகம் கருத்தால் அழகு குன்றிவிடும். கலை மங்கிவிடும் என்றும் எப்போதும் அவள் ஆனந்த ஸ்வரூபியாகவே இருக்கவேண்டும் என்கிற ஆசையால் எவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்கலாமோ, அத்தனையும் விட்டுக்கொடுத்துத் தான் நடக்கிறன்.

எப்படியிருந்தும்சுலோசனு மனத்தில் மட்டும் தனக்கு பூர்ண சுதந்திரம் கொடுக்கவில்லை என்றும் தன் கலைக்கு அமோகமான ஆதரவு தரவில்லை என்றும் ஒரு எண்ணம், ஊன்றி வளர்ந்துகொண்டுதான் வந்தது. அதை ரகுநாதன் அறியவில்லை பாவம்! தன் மனைவியைத் தான் எவ்வளவோ சந்தோஷப் படுத்துவதாகவே நினைத்து வந்தான்.

இரவு காலத்தில் ஆனந்தமாக ஆடச்செய்து தான் மட்டும் கண்டு களிக்க ரகுநாதன் ஒவ்வொரு தினமும் துடிதுடிப்பான். ஆனல் அவனுடைய துரதிருஷ்டம் அந்த ஆசை நிறைவேறுதபடிச் செய்வது போல் இன்று உடம்பு சரியில்லை. இன்று சாயங்காலம் என் சினேகிதைகளுக்காக ஆடி அலுப்பாகி விட்டது. நாளையதினம் பெரிய கச்சேரி, அதற்காக இன்று ஓய்வு வேண்டும் என்கிற பதிலே அதிகமாக வரும். என்றுவதொரு நாள் ஆடவும் ஆடுவாள். ஒரு நாளாவது தனது ஆசை நிறைவேறுகிறதே என்கிற சந்தோஷத்தையே அடைந்து அவளைக் கோபிக்காமலிருப்பான்.

ரகுவைச் சேர்ந்த சினேகிதர்கள், உறவினர்கள் யார் வந்தாலும் அவர்கள் மிகவும் ஏழை என்கிற இளப்பத்தால் சுலோசனு வரவேற்கவே மாட்டாள். அருவருப்பும் வெறுப்பும் கூட அடைந்து சொல்லாமல் தன்தாய் வீட்டிற்குப் போய் விடுவாள்: தன்னைச்சேர்ந்த சினேகிதர்களோ, உறவினர்களோ யார் வந்தாலும் நடக்கும் உபசாரமும் தடபுடலும் கூறிமுடியாது. இந்தச் செய்கை ரகுநாதனின் மனத்தை எத்தகைய அளிந்த புண்ணுக்கும் என்பதை சுலோசனு கனவில்கூட எண்ணவில்லை

மாதம் உள்ள முப்பது நாட்களில் இருபத்தொன்பதுநாள் தாய்வீட்டில் கழிப்பதும் ஒன்றிரண்டு நாட்களே கணவனுடன் இருப்பதும் சுலோசனுவுக்குச் சகஜமாகிவிட்டது. சிலசமயங்களில் 'பகல் நேரம் முழுவதும் தாய் வீட்டிலிருந்தது போதும் இரவு வீட்டிற்குப் போ!' என்று அவள் தாயாரே தூண்டுதல் செய்து அனுப்புவாள்.

இவ்விதமான முறையில்இவர்களுடைய வாழ்க்கைச்சக்கரம் சுழன்றுவரும்போதுதான் நம் கதை ஆரம்பமாகியது அன்று சுலோசனுவின் மேஜைமீதிருந்த ஒரு அச்சடித்த காகிதத்தை ரகு தற்செயலாகக் கண்டான். அதில் சுலோசனுவும் சுதர்சன் என்கிற நாட்டிய நிபுணனும் ஜோடி நாட்டியம் ஆடப்போவதாயும் அந்த நாட்டியத்தில் வசூலாகும் பணத்தை இந்தியச் சிப்பாய்களின் உதவி நிதிக்காகக் கொடுப்பது என்றும் அதற்கு மாகாணத்தில் தங்கிய கவர்னர் தலைமை வகிக்கப்போவதாயும், கவர்னர் மனைவி இவர்களுக்குத் தங்கப் பதக்கம் பரிசளிக்கப்போவதாயும் எழுதியிருந்தது.

அன்னிய ஆடவனுடன் நாட்டியமாடுவதைத் தான் வெறுப்பதாயும் தனக்கந்த ஒன்றுமட்டும் பிடிக்கவில்லை என்றும் ஸ்திரீகளுடன் எத்தனை வேண்டுமாயினும் ஆடலாம் என்றும் ரகு பலதரம் சொல்லியிருந்தும் அதை லக்ஷியம் செய்யாமல் இந்த ரகஸிய ஏற்பாடுகள் செய்திருப்பதைக்கண்டு அவன் உள்ளம் கொதித்தது. தன்னை வேண்டுமென்றே அலக்ஷியம் செய்வதாய் ஏற்கெனவே அவன் இதயத்தில் உதித்துள்ள எண்ணம் இச்செய்கையினால் பின்னும் ஊர்ஜிதமாயிற்று

கண்டிப்பாய் இந்த நாட்டியம் ஆடக்கூடாதென்று நிறுத்திவிடலாமா! என்றும் தோன்றியது. ஆனால் கவர்னர் தம்பதிகள்முதல் விஜயம்செய்வதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கும்போது இந்த நாட்டியம் என்னால் நின்றுவிட்டதென்றால் என் வேலைக்குத்தான் பேராபத்து விளைந்துவிடும். அதோடு நான் இப்போதுள்ள நிலைமையைவிட மோசமான நிலைமையில்தான் மதிக்கப்படுவேன்... உம்... என் விதி...... நான் எப்படியாவது போகிறேன் என்று பவுருஷத்துடன் நிறுத்திவிட முயன்றும் அதை அவள் லக்ஷியம் செய்யாமல் ஆடச்சென்றால் அதுமட்டும் அவமானமில்லையா :... அடடா! என் தலையில் பகவான் இப்படி எல்லாமா எழுதவேண்டும்?... நான் என்ன அபசாரம் செய்தேன்?

அதிகம் சொல்லப்போனால் அவளுக்குள்ள கலைப்பித்தின் வேகத்தில் ஓடியே போய்விட்டாலும் போகலாம்... ராம ராமா!... என் விதி அப்படி என்னைப் பரீக்ஷித்தாலும், பரீக்ஷிக்கும். ஓடிப்போனவளைத் தேடிப்பிடித்து அதற்கான எத்தனையோ புளுகு புராணங்களைக் கற்பனை செய்து சப்பைக்கட்டு கட்டி முகத்தில் அசடுவழிய அழைத்து வைத்துக்கொண்டு குலாவிக் கொடி ஏற்றும்படி நேர்ந்துவிட்டால் அந்த அவமானத்தை யாரால் சகிக்க முடியும்? பணத்திமிரும் பதவி கர்வமும் பெற்றுள்ள அவள் பிறந்த வீட்டினர் கட்டாயம் அப்படிச் செய்து என் தலையைத்தடவச் சற்றும் தியங்கமாட்டார்கள். அனாவசியமாய் அவ்வளவு தூரம் விட்டு அழியாத அவமானத்தை அடைவதைவிட இவள் போகும் வழியேவிட்டுப் பிடிப்பதுதான் உசிதம். இல்லையேல் இவளை அடியோடு துறந்துவிட வேண்டுவதுதான் என் விதி...

என்று மனது உடைந்துபோய் உட்கார்ந்திருந்த சமயந்தான் வீதியில் இந்திய சிப்பாய்களின் ஊர்வலம் சென்றது. அதையோர் வ்யாஜமாகக்கொண்டு தானே மனைவியிடம் சென்று அவளை வலுவில் இழுத்துக்கொண்டு வந்து காட்டினான். அவள் சீறிவிழுந்தவாறு உள்ளேசென்று படுத்துக்கொண்டாள். ஆனால் ரகு பின்னாலேயே போகா

மல் வராண்டாவிலேயே நின்று பல மான யோசனையிலாழ்ந்திருந்தான். அவன் உள்ளத்தில் செய்யும் வேதனை எல்லை கடந்தது.

3

பத்திரிகைகளில் சுலோசனவின் புகைப்படமும் சுதர்சனனின் படமும் அலங்காரமாக ப்ரகாசிப்பதைக் கண்டு யார் யாருக்கு எப்படி மனம் தோன்றுகிறதோ, அப்படி விமர்சனங்கள் செய்யவாரம்பித்தார்கள். கடற்கரையில் மணல்மீது குப்புறப் படுத்தவாறு கடலை நோக்கிக்கொண்டிருக்கும் ரகுநாதன் காதில் சில சோதாக்களுடையவும் கனவான்களுடையவும் விமர்சனங்கள் விழாமலில்லை.

"என்னவிருந்தாலும் இக்காலத்தில் பணந்தான் ப்ரதானம். மானமேது? ஹீனமேது? கலை கலை என்று கூறிக்கொண்டு விவாகமாகிய ஒரு பெண் அன்னியனுடன் ஆடுவது வெட்கக்கேடுதான். தனக்கொத்த ஜோடி காட்டியக்காரியுடன் ஆடுவதுதானே"...என்கிறதுஒருகுரல்...

"பலே ஜோடி சார்!....படத்திலேயே இத்தனை அழகாயுள்ள இந்த நாட்டியக்காரி நேரில் இன்னும் எப்படித்தானிருப்பாளோ! 5 ரூபாய் டிக்கட்டாவது வாங்கிக்கொண்டு போய் பார்க்கத்தான் வேண்டும்... ஆமாம்....இவள் தாசி குலமா.... குடும்பப் பெண்ணு...இந்த ஜோடிகள் காதலர்களாமே...இருக்கும்... அப்படியில்லாவிடில் ஆட ஒப்புவாளா?......குலப்பெண்ணுகவிருந்தால் இம்மாதிரி செய்ய ஒருபோதும் மனம் இசையாது....தாசியோ.... அல்லது குலத்திலிருந்தே தாசித்தொழில் நடத்துபவளோ! யார் கண்டது...எது எப்படியானு என்ன... கண்ணுக்குக் குளிர்ச்சியான பிம்பம். நேத்ரானந்த நடனம். இதயத்திற்கு இன்பமான உணர்ச்சி. சில மணிநேரங்கள் மெய்மறந்திருக்கலாம். அவ்வளவுதானே!...

இன்னொரு ரகஸியம் உனக்குத் தெரியுமா! கலாரஸிகரான காளமேகம் இருக்கிருரே! அவருடைய மகளுக்குக் கல்யாணமாம், இதே ஜோடியை நாளைக்குப் பார்த்துவிட்டுத்தாமும் ஏற்பாடுசெய்து அந்த முகாந்திரத்தைக்கொண்டு அவளையும் தன் வயப்படுத்தப் போகிருராம். அவரது சகாக்களிடயே இது பெருத்த குசுமசவாகவிருக்கிறது.....

கலையில் ஆர்வமும் அபிமானமும் வேண்டியதுதான். அதை ஆதரிக்க எல்லோரும் முற்படவும் வேண்டியததான்...ஆனல் அதற்கோர் வரம்பில்லையா? விவாகமாகிய பிறகு இம்மாதிரி இருப்பது சற்றும் நன்ருக இல்லை. அவளுடைய தகப்பனர் கொடுக்கும் இடமாம் இது. கணவன் ஒரு அப்பாவிமகனுக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த கூத்தடிப்புக்கு இடங்கொடுப்பானு...என்னமோ! அவனுக்கு அடங்காத பிடாரியாயிருந்தால் அவன் என்ன செய்யமுடியும்? தலைவிதியே என்றுதான் சும்மாக்கிடக்கிருனே என்னவோ.....இருக்காது. கலையில் ஆசைப்ரவாகம் அபாரமாய்ப் பொங்கியிருக்கும். அதனல் இதில் என்னகுற்றமென்று பேசாமலிருக்கலாம். கலையில் நாட்டமேயன்றி வேறு எதிலும் குற்றமே இருக்காது...அப்படிப்பட்ட மனப்பான்மை இருப்பதால்தான் பேசாமலிருக்கிருன்..

அவளுடைய தகப்பனருக்குத் தன்மகளின்நாட்டியத்திலுள்ள அளவற்ற ஆசையிலும் அவள் அடையும் புகழைக்கண்டு உள்ளம் பூரிப்பதிலும் மெய்மறந்து விடுகிறதேயன்றி அதன் சாதக பாதகம் சிறி

தும் தெரியவே இல்லை. மான அவ் மானத்தை ஒரு அணுவளவாவது நினைப்பவராயிருந்தால் கல்யாணம் செய்து கொடுத்த பெண்ணைப் பிறத்தியானுடன் ஆடுவதற்கு மனம் ஒப்பிப் பல்லிளிப்பாரா ?

அடாடா ! சில வருஷங்களுக்கு முன் இந்த நாட்டியக்கலை பட்ட பாடென்ன ! இன்று அதே கலை அடைந்துள்ள உன்னத நிலை என்ன ஏன்......மிதமிஞ்சிக்கொண்டே வருகின்றதென்றாலும் மிகையாகாது. எந்த கலையும் வரம்புக்கு மீறிவிட்டால் கலையின் லக்ஷ்யமே சிதறிவிடுமோ என்றுகூடத் தோன்றிவிடுகிறது. அனேக இடங்களில் நாட்டியக் கலையை நன்கு பயின்ற சிறுமிகள் காலக்ரமத்தில் ஜாதி, மதம் முதலிய நிர்ணயத்தைக்கூடக் கடந்து நாட்டியக்காரனையே மணந்து ஜோடி நாட்டியமாடவும் அமைந்து விடுகிறது. இப்படிக் கூத்தடிப்பதைவிட இதையே ஓரளவு கூட்டிக்கொள்ளலாமென்றுகூடத் தோன்றுகிறது.

'ஏதடா! இப்படிச் சொல்கிறனே! இவனுக்கு நாட்டியமே பிடிக்காதா!' என்று நினைத்துவிடாதீர்கள். அளவுக்கு மீறினல் அமுதமும் நஞ்சாகும் என்கிற பழமொழியை மறக்கக் கூடாது. உத்க்ருஷ்டமான அந்த அத்புதக் கலையை நான் என் உயிரினும் அதிகமாய் நேசிக்கிறேன். அதைப் போற்றி வணங்கவும் சித்தமாயிருக்கிறேன். ஆனல் சினிமாவை கலை கலை என்று சொல்லிக்கொண்டு ஒரு சாரார் அதைக் கொலை செய்து சமூகத்திற்கும் தேசத்திற்கும் இழுக்கை உண்டாக்கிவருவதுபோல் இந்த கலையையும் பாழாக்கிவிட நான் ஒப்பமாட்டேன். கலையை வளர்க்கவும் அதை ஆதரித்து அதற்காகவேஉழைக்கவும் நாம் கடமைப்பட்டிருப்பதை நான் மறுக்கவில்லை. கலையை ஆதரிக்கும் முறையில் நீதியை.....நெறியை..... கற்பை.....மானத்தை.....பண்டைய காலத்துப் பெருமையைக்கூட ஆதரித்து வளர்க்கவேண்டுமேயன்றி ஒன்றிற்காக ஒன்றைக் கொலைசெய்வதை பலமாக ஆக்ஷேபிக்கிறேன்.

நாட்டியக்கலைகளை ஒரு வரம்பு வரையில் கற்று ஆடலாம். நாட்டியக் கலைக்குத் தன்னை அர்ப்பணம் செய்துவிட்டவர் அதையே தாராளமாய்த் தெய்வமெனத் தொழலாம். தனித்து ஆடலாம், ஜோடிப் பெண்களோடு போட்டியும் இடலாம். ஆனல் கண்ட அன்னியனுடன் ஆடுவதை என்மனது வெறுக்கிறது. அதோடு கல்யாணம் செய்து கொண்டு குடும்பத்தை நடத்த வேண்டுமென்கிற ஆர்வத்துடன் அத்துறையில் இறங்கிய பிறகு க்ருகக்ருத்யங்களில் தனது பரிபூர்ண திறமையைக்காட்டி உழைத்தும் மக்களைப்பெற்றும் தன் கலையை வாழையடி வாழையாய் தன் மக்களுக்குக் கற்றுக்கொடுத்தும் வ்ருத்திசெய்வதுதான் அழகு : ஏதோ ஒரு சாரார் தாமே கணவனின் சம்மதத்தையும் பெற்று ஆடக்கூடும். அது வெகு அபூர்வந்தான். எந்தக் கணவன்தான் தன் மனைவியை பிறத்தியானுடன் ஆடவைத்துப்பார்த்துத் தாளம் போடுவான்? விளையாட்டுக்காக விளக்கில் பஞ்சைக்காட்டினல் மட்டும் பொசுங்கி விடாதா? காதல் கட்டங்களை நாட்டியமாடும்போது அந்த வேகம் உண்மையிலும் பாய்ந்து விடாதா?... அந்த ஆபத்தை ஏன் விலைக்கு வாங்கவேண்டும்?...

"ஓய்! ...நானும் அப்போது முதல் பார்க்கிறேன். நிம்மதியாகக்கண்ணை மூடிக்கொண்டு கற்பனையுலகில் சஞ்சரித்து அபூர்வமான விஷயக்

கோர்வையை உண்டாக்க வேண்டும் என்று நான் சமுத்திரராஜன் முன்பு படுத்துக் கிடந்தால், ஏதோ சளசளவென்று ஒருவர்மாற்றி ஒருவர் பேச்சை கொட்டியளக்கிறீர்களே!...சே ச் சே ச...தலைவேதனை தாங்கமுடியவில்லை. இங்கு ஏதாவது பொதுக்கூட்டம் போட்டு நாட்டியக் கலையைப்பற்றி உங்களை ப்ரஸங்கம் செய்ய அழைத்தார்களா! ப்ரஸங்கி கூட ஒரு சமயம் விஷயத்தை சற்று மறதியாய்ப் பேசுவான். நீங்களேனய்யா வீண்போராட்டமாடுகிறீர்? யார் ஆடினால் என்ன? யார் எக்கேடுகெட்டால் என்ன? உங்களை யார் கேட்டார்கள்?

ஆதியில் இக்கலை தாசிகளின் கைக்குப்போயிற்று. பிறகு திரும்பி வந்திருக்கிறது. கலைமட்டுமா வந்தது? தாசிகளின் சகலகுண விசேஷங்களும் அனேக ஸ்த்ரீகளிடம் குடியேறி குலஸ்த்ரீகளின் சகல அம்சங்களில் சில தாசிகளிடம் சரணாகதி பண்ணிவிட்டன. இந்த அழகைக் கண்டிக்க வாயைக் காணவில்லை. வழியும் கிடைக்கவில்லை, எந்த விஷயமும் அதீதமாக வளரவாரம்பித்தால் உடனே அழிவுதான். மறுபடியும் இதே கலை என்ன கதிக்கு வந்து சீரழியப்போகிறதோ? நீங்களேன் மண்டையை உடைத்துக்கொண்டு என் மூளையையும் கலக்கவேண்டும்? பொழுது போகவில்லை என்றால், நாராயணா! நமச்சிவாயா...என்று முணுமுணுத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தால் பண்ணிய பாவமாவது தீருமல்லவா! காசுக்கு உபயோகமற்ற விஷயத்தில் ஏன் காலத்தைப்போக்க வேண்டும்? நீங்கள் இப்படிக் கூடிக்கூடி பேசிவிட்டால் உலகம் உடனே திருந்திவிடும், ராமராஜ்யம் அப்படியே நிறுவி விடும். பிறகு பேச்சுக்கும் ஏச்சுக்கும் இடமே இருக்

காது... ...அப்படித்தானே !...போங்கய்யா! போங்க..."பொழுது போக்கற்ற அம்பட்டன் பெண்டாட்டி தலையைச் சிரைத்தானும்" என்பது பழமொழி. அது உங்களுக்குத்தான் சரி. ஊரார் விஷயத்தைக் கொட்டியளக்க இத்தனை தூரம் வந்துவிட்டீர்களே" என்று சுடச்சுட சொல்லிக் கொண்டே ஒரே விசையாய் எழுந்து போய்விட்டான்.

அங்குக் கூடியிருந்தவர்களில் பெரும்பாலோரும் இந்த மனிதன் கீழ்ப்பாக்கத்து ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்து விட்ட ஆத்மாதான். இல்லாவிட்டால் முடுக்கிவிட்ட மெஷின் போல் இப்படி கத்தி விட்டுப்போவானா! பயித்தியம்... இந்த ஒன்னரைப் பயித்திய ஆசாமி கட்டுரை எழுதப் போகிறானாம்....கதை எழுதப்போகிறானாம் எழுதுகிற மொகரக் கட்டையைப் பாரு... என்று கூறி கடகடவென்று சிரித்தவாறு...டேய்! எழுத்தாளப் புலியே ...தடுக்கிவிழப் போகிறாய்! பார்த்து நட... என்று குறும்புத் தனமாகக் கூறி நகைத்தார்கள்.

அக் கூட்டத்திலும் ஓடிப்போன மனிதனின் வார்த்தைக்கு மதிப்பு வைத்துப் பேசும் மனிதர்கள் இல்லாமலில்லை. ஏன்சார்!ஒருநொடியில் தூக்கிக் கவிழ்த்துப் பேசுகிறீர்கள் ? அந்த மனிதன் சொல்வது நூற்றுக்கு நூறு சரியானதுதான். "யதார்த்தவாதி, பகுஜனவிரோதி' என்பது பொய்யாகுமா! அது போலத்தான் மதிக்கப் படுகிறான். கீழ்ப்பாக்கத்து ஆஸ்பத்திரியிலிருந்து ஓடிவந்தவர்கள் போலிருப்பவர்கள் தான் ப்ரமாதமான எழுத்தாளர்களாயும் கவிவாணர்களாயும் சித்திரக்காரராயும் இருக்கிறார்கள். இது ப்ரத்யக்ஷமாகக் கண்கூடாகக் காண்கிறோம். கம்பன்,காளிதாஸன், பவபூதி, த்யாகராஜஸ்வாமிகள், அருணாசலக்கவிராயர், பாரதியார் எஸ். ஜி. ராமானுஜலு நாயுடுகாரு பழந்தாதா ஸ்வாமிநாத ஐயர், நடேச சாஸ்திரிகள் முதலியவர்கள் நவ நாகரீக அலங்காரத்துடன் மேல் பகட்டான ஹாட்டும் ஸூட்டும். பூட்டும் போட்டுக்கொண்டு கொள்ளி வாய்ப் பிசாசுகள் போல் வாயில் ஸிகரேட்டுத் தீ புகைக்கக் காக்ஷியளித்தார்களா ? அவர்களுடைய தோற்றத்திற்குத்தான் இன்றும் உலகம் மதிப்பு வைத்திருக்கிறதா! அன்றி அவர்களிடமிருந்து உண்டாகிய கலைப் பொக்கிஷத்திற்கு மதிப்பு வைத்திருக்கிறதா...மேல் வேஷமும் டாம்பீகமும் எதற்கய்யா! அம்மாதிரியிருப்பவர்களிடம் உண்மையில் சரக்கு அதிகம் இருப்பதே சந்தேகந்தான்... இப்படிப் பேசுகிற நான் கூட உங்களுக்கு கீழ்ப்பாக்கத்து ஆசாமி என்றுதான் தோன்றும். வீண் பேச்செதற்கு?" என்று கூறிக்கொண்டே அவரும் எழுந்து நடந்தார். கலகல வென்ற சிரிப்பொலி கடலின் அலைகளின் பேரிரைச்சலையும் மீறிக்கொண்டு கணீரென அவர் காதில் ஒலித்தது...

4

ஒரு விஷயத்திலும் கலந்து கொள்ளாது படுத்திருந்த ரகுபதி மனப் போராட்டத்தைச் சகிக்காமல் தடதடவென்று வீட்டிற்கு வந்தான். சுலோசனை சோபாவில் முணுமுணுத்துப் படுத்தவள் வெகு நேரங்கழித்து மெல்ல எழுந்து மனத்தைத் தேற்றிக் கொண்டு முகங்கழுவி சுத்தமாக அலங்கரித்துக்கொண்டு மறுபடியும் நிலைக்கண்ணாடிக்கு முன்பு ஆடத்தொடங்கினாள். அவளுடைய ஆருயிர் சிநேகிதை லலிதாம்பாள் இனிய சாரீரத்துடன் பின்னணி கீதம் இசைத்துக்கொண்டிருந்தாள்.

அதே சொல்ல வல்லாயோ! கிளியே...என்கிற பாடலைப்பாடி அவள் செய்யும் அபூர்வமான அபிநயத்தை தூரவிருந்து பார்க்கும் ரகுவின் மனம் இன்னதென்று விவரிக்கமுடியாத உணர்ச்சிக் கடலில் தத்தளிக்கின்றது. சுலோசனாவின் கண்கொள்ளாத அழகும், அபிநயத்தின் முகபாவமும் ஒருபுறம் அவன் நெஞ்சையள்ளுகிறது...இத்தகைய நாரீ ரத்தினத்தைப் பற்றி இத்தனை நேரம் கடல்கரையில்நடந்த விமர்சனத்தின்எதிரொலி வேறு தடார் தடார் என்று காதில் கேட்டுத் திடுக்கிடச்செய்கிறது... அவர்கள் பேசிக்கொண்டபடி, இப்பாடலின் அர்த்தத்தின்படி இவள் மனதும் சிதறிவிடுமோ!...என்று நினைக்கும்போது உடம்பே தீப்பிடித்து எரிவதுபோல்தோன்றியது..

சீச்சீ...யார் எப்படி என்ன பேசினாலும் சுலோசனாவின் மனது களங்கமற்றது...கலைக்கு அடிமையானது. மாசற்ற உள்ளத்துடன் கூடிய சுத்த வெள்ளை உள்ளத்தில் கள்ளம் புக நியாயமில்லை. பனை மரத்தடியில் உட்கார்ந்து பாலைக் குடித்தாலும் கள்ளைக் குடித்தது போலத்தானே உலகம் நிந்திக்கும். அதே கதிதான் இந்தசம்பவத்திலும். அடாடா! அந்த அபிநயத்தின் அழகைக் காணும்போது அவளைத் திட்டுவதற்கு என் மனம் சற்றும் இடந்தராது அடிமையாகிவிடுகிறதே... அவள் தாராளமாக ஆடட்டும். அன்னியனுடன் ஆடாமல் அதை மட்டும் விட்டுவிட்டால் போதும்... இதே ஆட்டத்தின் விளைவால் குடும்பத்திற்குத்தான் தலைவி என்பதைக் கூட மறந்துவிடுகிறாளே! இதுவும் தர்மசங்கடமாகத்தானிருக்கிறது..... என்ன செய்வது?...என்று மனத்திற்குள்ளேயே மருகித்தவித்தான்... இருக்கை கொள்ளவில்லை. எதையோ எண்ணியவனாய் தடதடவென்று அந்த இரவிலேயே மாமனார்வீட்டிற்குத் தைரியமாகச் சென்றான். பலதரம் அழைத்தால்கூட ஏதோ சாக்குப்போக்குச் சொல்லிவிட்டு வராதிருக்கும்மருமகப்பிள்ளை இன்று தாமாக வந்திருப்பதைக் கண்டு மிக மிக ஆச்சரியத்தையடைந்த மாமனார், "ஏதேது அத்தி பூத்ததுபோலிருக்கிறதே, என்ன விசேஷம்?...சுலோசனா வரவில்லையா!" என்று கேட்டார்.

ரகு:—இல்லை...விசேஷம் இருக்கவேதான் நான் வந்தேன்! உங்களுடைய நாகரீகமும், செல்வமும் கூடிய திரைமறைவில் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்றமுறையில் நீங்கள் செய்வதை நான் சற்றும் விரும்பவில்லை. உங்கள் மகளை நீங்கள் ஒரு அன்னிய ஆடவனுடன் ஆடவிடுவதை நீங்கள் பெருமையாக மதிக்கிறீர்கள். ஆனால் உலகம் அதை எவ்வளவு கேவலமாகத் தூற்றிப்பேசுகிறது என்பதை நீங்களறியவில்லை போலும், நானும் கலையில் ஆர்வமுள்ளவன்தான். சுத்த சூனிய உள்ளம் படைத்த மூடனில்லை. இருப்பினும் ஒருவனுக்கு மணம்செய்வித்த மங்கையை இன்னொருவனுடன் பகிரங்க சபையில் ஆடவைப்பதை நான் சற்றும் ஒப்பமாட்டேன். இதை எப்படியாவது நீங்கள் தடுத்தாகவேண்டும். இதைத் தெரிவிக்கவே நான் வந்தேன்...என்று கடுகடுப்பான முகத்துடன் படபடத்துக் கூறினான்.

இதுகேட்ட மாமனார் மேஜைமீது ஓங்கி ஒரு தட்டு தட்டிவிட்டு கடகடவென்று இடிஇடிப்பதுபோல் ஒரு கர்ஜனைச் சிரிப்பு சிரித்தபடியே "ஓகோ! இந்த மகத்தான குற்றத்தை எடுத்துக்கொண்டுதான்

ஸ்வாமிகள் அபூர்வமாய் வந்தீர்களோ! பேஷ்...உலகமாம்... உலக்கையாம்...கலையில் ருசியற்ற கட்டைகளின் வீண் அரட்டல் பேச்சுக்கும், வம்பிற்கும் நான் பயந்தவனல்ல...அன்னியனுடன் ஆடியதினால் என்னய்யா கெட்டுவிட்டது! மாக்ஷிமை தங்கிய கவர்னர் தம்பதிகளின் முன்னிலையில் ஆடி அபாரப் புகழ் பெறப்போவதை நீர் விரும்பாவிட்டால் அது உமது துரதிருஷ்டம் என்றுதான் நான் கூசாமல் கூறுவேன். நெருப்பு என்றாலே வாய் சுட்டுவிடுமோ? ஆயிரக்கணக்கான கோபஸ்த்ரீகள் கண்ணனுடன் ஆடிப்பாடி ஆயர்பாடியில் களிக்கவில்லையா? அதனால் அவர்களுக்கு களங்கம் வந்துவிட்டதா! நூற்றுக்கணக்கான டாக்டர்கள் பெண்களின் கையைப் பிடித்துப் பார்த்து வைத்தியம் செய்யவில்லையா...அதனால் அழிவு வந்துவிட்டதா?...

இந்த அர்த்தமற்ற வார்த்தைகளை ரகுநாதனால் கேட்கமுடியவில்லை. ராம...ராமா...என்று காதைப் பொத்திக்கொண்டு இடைமறுத்து 'ஸார்! உங்கள் மகளும் பரிசுத்தமான கோபகன்யை...அவளுடன் ஆடப்போகும் மனிதன் சாக்ஷாத் ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா....அப்படித்தானே! தாமரை இலை நீர்த்துளி போல் பற்றற்ற மனத்தையுடைய சுத்த த்யாகப் பிழம்புகளல்லவா... ஆக்கலும் அழித்தலுமான சக்தி பெற்று ஓர் ஆலிலையில் துயின்று அண்டசராசரத்தையும் குக்ஷியில் வைத்துக் காத்த சர்வேச்வரனுக்கு ஒப்பிட்டா இந்த ஊற்றப்பிண்டத்தை பேசுகிறீர்கள்....ஆம்.....இவனிடம் ஆக்கலும் அழித்தலும் இருக்கிறது.. இயற்கையாகத் தொன்றுதொட்டு வரும் பொக்கிஷம்போன்ற கற்பை அழித்தலும் கீழ்தர நரகத்திற்கு வழியை ஆக்கலுமான சக்தியிருப்பதை மறந்தேன்...

ஆபத்தில் உயிர் கொடுக்கும் புனிதமான தொழிலாகிய டாக்டரை உபமானம் கூற உமக்கு வெட்கமில்லையா...உம்முடைய மகளுக்கு அப்பேர்ப்பட்ட பேராபத்தான நிலைமை என்ன வந்துவிட்டது.... அந்த தன்வந்திரியா பரம அவுஷதத்தைக் கொடுத்து வ்யாதியைத் தீர்க்கப்போகிறான்...பேஷ்...இந்தமாதிரி ரஸாபாஸமான வார்த்தையை நான் சற்றும் கேட்கவரவில்லை. இந்த நாட்டியத்தை நிறுத்தப்போகிறீர்களா...அன்றி...

என்று முடிப்பதற்குள் "என்ன! என்ன...அன்றி கூறாமல் சன்யாசம் வாங்கிக்கொள்வீரோ...அல்லது என் பெண்ணைக் கொலைசெய்துவிடுவீரோ? சபாஷ்...கவர்னரின் தயவுக்காக நான் பட்டபாடு எனக்குத் தெரியும். அடுத்த மாதமே உனக்கு உயர்தர வேலையும் 500 ரூபாய் சம்பளமும் காத்திருக்கிறது என்பதை மறந்துவிடாதே..எனக்கும் சர். பட்டம் தயாராகியிருக்கிறது. தானாக வரும் ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு என்றென்றும் மூதேவியுடன் வாஸம் செய்வதை நிரந்தரமாக்கிக் கொள்ளாதே.....தெரிந்ததா....சகல ஏற்பாடுகளும் நடந்துவிட்டபிறகு இனி இதை நிறுத்தினால் வீணாக என்மீது குற்றங்கள்கூடப் பிறந்துவிடும். உன் வேலையும் சலாம் வைத்துக்கொண்டு ஓடிவிடும். ஆகையால் இதில் நீ அனாவசியமாய் தலையிடாதே......என்று ஏகதேசமாயும் துச்சமாயும் கூறினான்...

ரகுவின் வயிறும் மனமும் கொதிக்கின்றன. அவனால் சகிக்கவே முடியவில்லை இந்த அவமானத்தை. உம்....இப்போது புரிந்

தது. உமது றெண்ணின் மானத்தை அழித்து நீர் உமக்குப் பட்டமும் எனக்குப் பணமும் தேடிவைக்க இந்த சூழ்ச்சி செய்திருக்கிறீரா... சரிதான்...நானும் உம்மைப்போல் சுயஅபிமானம், சுயமரியாதை முதலியன செத்துவிட்ட பிணமில்லை. என் மனைவியை ஆடவைத்து எனக்கு உத்யோகம் உயர்த்திக்கொண்டு நானும் நாலுபேர் முன்பு பல்லிளித்துக்கொண்டு சில பெரிய மனிதர்கள்போல் உலாவ, செத்தாலும் துணியமாட்டேன். ஜாக்ரதை. இந்த நாடகத்தை நான் கட்டாயம் நிறுத்திவிட்டு மறுகாரியம் பார்க்கப் போகிறேன். இதனால் எனக்கு தலைபோகும் ஆபத்துக்கள் எது வந்தாலும் நான் அவைகளை வரவேற்கத் தயாராயிருக்கிறேன். இன்னும் ஒன்று, இதே நாட்டியம் இவளைப் போல் சிறந்த ஓர் பெண்மணியுடன் நடத்தட்டும் 'நானும் கண்குளிரப் பார்க்கிறேன். இதுவும் எனது இரண்டாவது பக்ஷமான வார்த்தைதான். இத்தனை ஏற்பாடுகளும் ஆகி நிற்காமலிருப்பதற்கு இதைக் கூறுகிறேன். இதற்கும் மிஞ்சினால் சகலமும் மிஞ்சிவிடும் ஜாக்ரதை'' என்று ஒரே வெடிகுண்டு வீசி எறிவது போல் கூறிவிட்டு விருவிரென்று போய்விட்டான். மாமனார் ஏதோ பெரிய கர்ஜனைசெய்துத் திட்டுவது வீதியில் சிறிதுதூரம் செல்லும் வரையில்கூடக் காதில் கேட்டது.

5

கணவன் கலைத்துவிட்டதால் முதலில் எத்தனைக் கெத்தனை நாட்டியம் கலைந்துவிட்டதாக எண்ணினாளோ, அத்தனைக் கத்தனை வெகு அழகாகவும் திறமையுடனும் இப்போது வந்துவிட்டதால் சுலோசனாவின் சந்தோஷம் உச்சத்தை எட்டி அலைமோதியது. நாளைய நாட்டியம் வெகுவெகு அத்புதமாக விருக்கும் என்று அவளுக்கு இப்போதே அபாரமான நம்பிக்கை உண்டாகியது. அவளை யறியாமலேயே துள்ளிக்குதித்தாள். மறுநாள் நடக்கப் போவதை மானஸீகமாக எண்ணி எண்ணித் தானே இன்பவாரிதியில் திளைந்தாள்.

அச்சமயந்தான் ரகு உடைந்த மனத்துடன் சொல்லவறியாத மனவேதனையும் அதிர்ச்சியும் பாதிக்க வீட்டிற்கு வந்தான். ரகுவிற்கு உண்மையில் அவளிடமுள்ளப்ரேமையை எல்லைவகுத்துக் கூற முடியாது. தனக்குக்கிடைக்கக்கூடியவஸ்துவே அவளல்ல. ஏதோ அதிர்ஷ்ட வசமாகத்தான் கிடைத்தது. என்கிற நம்பிக்கையை மறக்காதவன்.

வீட்டிற்கு வந்ததும் நேரே தன்னறையில் விளக்குக்கூட வைக்காமல் இருட்டிலேயே கட்டிலில் படுத்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் சுலோசனா அவ்வறைக்குள் வெகு குதூகலத்துடன் ப்ரவேசித்தாள். ''இதென்ன! இன்னும் விளக்கேற்றவில்லை ?'' என்று கூறிக்கொண்டே விளக்கை ஏற்றினாள். வாடி வதங்கி எரியப்பட்ட தளிர்போல் ரகு படுத்திருப்பதைக் கண்டதும், ''ஓ! இங்கேயா இருக்கிறீர்கள்? வெளியே போயிருப்பதாக வன்றோ! எண்ணினேன்...எங்கும் போகவில்லையா! ஏன் ஒரு மாதிரியாயிருக்கிறீர்கள்... உடம்புக் கொன்றுமில்லையே!'' என்று அன்பு கனியக்கேட்டாள்.

முதலில் ரகுவிற்கிருந்த கோபத்தில் அவளுடன் பேசவே பிடிக்கவில்லை. எனினும் அவளுடைய அப்பழுக்கற்ற பரிசுத்த உள்ளத்தை அவன் நன்கறிவானாகையினாலும் அவள் அன்புடன் விசாரிப்பதில் சற்று மதி தடுமாறி விட்டதாலும்

அவன் உடம்புக் கொன்றுமில்லை என்று மட்டும் கூறினன்.

பூர்ண சந்திர பிம்பத்தைப் பழிக்கும் அவளது செளந்தர்ய வதனத்தைக் காணக் காண மனது அன்புக்குக் கட்டுப்பட்டு நெகிழ்கிறதேயன்றி கடினமான எண்ணம் உண்டாகவில்லை. அவன் முகத்தில் வெயர்வை முத்து முத்தாய் அரும்புவதைக் கண்டு சுலோசனா தன் கைக்குட்டையால் துடைத்து விட்டு மின்சார விசிறியைத் திருப்பிவிட்டாள்: அப்ப! என்ன வெப்பம்!......இங்கேயே இருப்பது தெரிந்திருந்தால் நான் உங்களைக் கூப்பிட்டிருப்பேன். லலிதாம்பாள் தற்செயலாய் வந்தாள். அவளைப் பாடச் சொல்லி நான் ஒத்திகை ஆடிப் பார்த்தேன். வெகுவெகு அத்புதமாய் இருந்தது. நானே ப்ரமித்துவிட்டேன்.

ரகு:—என்ன! ஒத்திகையா?... எங்காவது நாட்டியக் கச்சேரியா!

சுலோ:—இதென்ன இப்படிக் கேட்கிறீர்களே! பத்திரிகைகளில் எல்லாம் தடபுடலாக வந்திருக்கிறதே! நீங்கள் பார்க்கவில்லையா...

ரகு:—ஊஹூம்...எனக்குப் பத்திரிகை படிக்க நேரமேது? வடநாட்டில் நடக்கும் ஒரு வாரப்பத்திரிகையில் ஒரு கட்டுரைப்போட்டி வைத்திருக்கிறார்கள்.—"பெண்களின் பெருமை" என்கிற விஷயத்தை யார் வெகு அழகாயும், உண்மையான அனுபவ உணர்ச்சியுடனும் வசீகர நடையில் விஷயமேன்மையுடன் எழுதுகிறார்களோ அவர்களுக்கு ரூ. 1000 பரிசு—என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள். எனது மனது பூராவும் அதிலேயே லயித்திருக்கிறது. பெண்களின் பெருமையை எப்படி எழுதுவது! உதாரணங்கள், தக்க ஆதர்சனங்கள் என்ன எழுதுவது என்கிற யோசனையிலேயே குழம்பிக்கிடக்கிறேன். அந்த ரூபாய்வந்தால் உனக்கோர் நல்ல வைர நகை செய்துபோட்டு ஆனந்தமாய் பார்க்கலாம்... ஆசை என்னமோப்ரவாகமாய்த்தான் ஓடுகிறது. விஷயமென்னவோ உதயமாகவில்லை... அது கிடக்கட்டும்.எங்கே கச்சேரி...

சுலோ:—அட ராமா! இதற்கா இப்படிக் குழம்பவேண்டும்? பெண்களின்சிறப்பைப்பற்றி எத்தனையோ ஆயிரக்கணக்கான உதாரணங்களும் நூல்களும் இருக்கும்போது ஏன் கவலைப்படவேண்டும்? என்னுடைய இந்த நாட்டியக்கச்சேரி முடியட்டும். நானே உங்களுக்குக் கொடுக்கிறேன். நாட்டிய அரசன் என்று புகழ்பெற்ற ஸ்ரீமான் சுதர்சன் அவர்களுடன் ஜோடிநாட்டியக் கச்சேரி கவர்னர் தம்பதிகளின் முன்பு நடக்கப்போகிறது அதற்கு நீங்கள் கட்டாயம் வரவேண்டும். நூறு ரூபாயிலிருந்து 5 ரூபாய்வரையில் டிக்கட்டுப் போட்டார்களாம். அத்தனையும் விற்றுவிட்டதாம். பெரிய வெற்றியல்லவா இது...

ரகு:—ஆம். சந்தேகமில்லாமல் அபாரமான வெற்றி. வாழ்க்கையின் முக்யத்திற்கே வெற்றிதான்... உனக்கு வெற்றி சுலபமாய் கிடைப்பதுபோல் என்கட்டுரைக்கு வெற்றி கிடைக்கவேண்டுமே...என்ன எழுதுவதென்றே தோன்றவில்லையே...

சுலோ:—ஆமாம்... இதற்கெல்லாமா கவலைப்படுவார்கள்? பெண்களின் பெருமைக்கு விஷயந்தானா கிடையாது? பெண்கள்தான் மூலதெய்வம். பெண்களில்லாவிடில் உலகமே கிடையாது. அதனால்தான் செல்வத்திற்கதிபதி லக்ஷ்மி, ஒரு பெண். சகல கலைக்கும் அரசி ஸரஸ்வதி; அவளும் ஒரு பெண்மணி.

மனிதனுக்கு ஸ்வாசம் விடுவதற்கு முதற்கொண்டு சகலத்திற்கும் சக்தி கொடுப்பவள் பராசக்தி, அவளும் ஒரு பெண். சமஸ்த பாரத்தையும் க்ஷமாகுணத்துடன் ஓயாது தாங்கி நிற்கும் நிர்வாக குணமும் பொறுமையும் பெற்ற பூமாதேவியும் ஒரு பெண்தான். மக்களின் பாப அழுக்கைப் போக்கிப் புனிதமாகச் செய்யும் மகிமை பொருந்திய உயர்ந்த நதிகளும் பெண்ணினங்கள்தான். ஆகாயவாணியும் பெண்தான். உலகத்தையே கட்டியாளும் இராஜாதிராஜனாயிருந்தாலும் அவனையும் ஒரு பெண் தெய்வந்தான் பெற்று உபசரிக்கச் செய்கிறாள்.

183102

சகல அம்சங்களிலும் பெண்களே ப்ரதான தெய்வமாய் வழிகாட்டியாயிருப்பதனால்தான் அவ்வினத்தில் பிறந்த பெண்களுக்குத் தனிச்சிறப்பு இருக்கிறது. அதோடு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, கற்பு, பொறுமை, சகிப்புக்குணம், வாத்ஸல்ய இதயம், பச்சாத்தாப உள்ளம் முதலியன பிறவியிலேயே அமைந்து அவர்களைப் பின்னும் மேம்படச்செய்கின்றன. தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள், பெய் எனப் பெய்யும்மழை என்றெல்லாம் பெரியார் கொண்டாடியிருக்கிறார்கள். என்றைக்கும் பெண் தன் வாழ்நாளில் முதலில் பெற்றோருக்கும் பிறகு கணவனுக்கும் அதன்பிறகு மகனுக்கும் கட்டுப்பட்டு அவர்களின் பாதுகாப்பிலேயே தனது காலத்தைக் கடத்தும் உயர்ந்த கோட்பாடு அமைந்திருப்பதால் என்றென்றும் அவள் கடமையிலேயே கண்ணாக இருக்கும் பொறுப்பு பெற்றுவிடுகிறாள்....இதுபோல் எத்தனையோ இருக்கின்றன. நளாயினி, ஸீதை, ஸாவித்திரி, அனஸூயை......முதலியவர்களைக் குறிப்பிட்டெழுதலாம். எழுதுவதற்குத்தானா விஷயமில்லை?...

இவைகளைக் கேட்ட ரகுவின் உள்ளம் ஒருபுறம் ஆனந்தத்தினால் நிரம்புகிறது. ஒருபுறம் தன்னைமீறி புகைந்து கருகுகிறது. தனது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு "சுலோசனா! உன் கருத்துக்களும் உபமானங்களும் என்னை ப்ரமிக்கச் செய்வது உண்மைதான். நான் இத்தனை உதாரணங்களும் கொடுத்து எழுதிவிடுகிறேன் என்று வைத்துக்கொள். இதைப் படிப்போர்கள் பெரிதாகச் சிரித்து, 'தன் மனைவியை பிறத்தியானுடன் கூத்தாட விட்டுவிட்டு இவன் நீதியும், நிர்ணயமும் பேசி எழுத வந்துவிட்டான் மடையன்' என்று ஏசிப் பேசி எள்ளி நகைத்துக் காரியுமிழமாட்டார்களா! கற்பனையினால் காகிதத்தில் எழுதும் பெண்களுக்குள்ள மானம், மரியாதை உண்மையாய் ஜென்மமெடுத்துள்ள மக்களுக்கு வேண்டாமா! அந்த வகுப்பில் உனக்கு இடம் வேண்டாமா! எவ்வளவுதான் கலையில் ஆர்வமும் ஆசை ப்ரவாகம்போல் பெருக்கும் இருப்பினும்கூட அன்னியனுடன் கை கோர்த்தும், தேகத்துடன் தேகம் பதிந்தும், முகத்துடன் முகம் பதிந்தும் ஆடுவதற்கு உன் மனது துணிகிறதா! பெண்களைப்பற்றிய மேம்பாட்டை இத்தனை சிறப்புடன் எடுத்துக் கூறிய நீயே அம்மாதிரி நடக்க இசையாமல் இப்படிச் செய்வது தகுமா!

சுலோசனா! எனக்குவரும் ஏச்சும் பேச்சும் அபக்யாதியும் உனக்கும் பாதிக்காமலிருக்க முடியுமா! தன் தலையில் குப்பைக்கூடையை வைத்துக்கொண்டு பிறர் தலையிலுள்ள புஷ்பக்கூடையை ஆராய வந்துவிட்டான் என்று உலகம் கூறாதா?

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த முயலண்ணு, தொலையிலே துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வருகிற சம்பு ஐயரைப் பார்த்தார் நடுக்கம். ஆனுலும் தைரியத்தை விடாமல் ஒருதந்திரம் பண்ணினுர்.

ஆலோலம். ஆலோலம்
ஐந்து ரூபாய்க்கு ஆலோலம்''
என்று பாடினுர்.

பாட்டு காடிராயரின் காதில் விழுந்தது திரும்பிப் பார்த்தார்.

பிறகு நடந்ததென்ன? அடுத்த இதழில் படியுங்கள்.

சிறுவர் அறிவு வளர்ச்சித் தொகுதி

பாலர் மோகினி

குழந்தைகளுக்கென்றே குட்டி புத்தகங்கள்

முதல் புத்தகம் இன்னும் சில தினங்களில் வெளிவரும்

பாலர்களும், பாலர்களின் களிப்பிலும் அறிவு வளர்ச்சியிலும் சிரத்தையுள்ள பெற்ருேர்களும், உபாத்தியாயர்களும் இந்தத் தொகுதியை வெகு ஆவலுடன் எதிர்பார்க்கிருர்களென்பது பலரிடமிருந்து வந்துள்ள கடிதங்களிலிருந்து அறிந்து மகிழ்கிருேம், தயவுசெய்து சில தினங்கள் பொறுங்கள்.

முதல் புத்தகத்துக்கு விஷயதானம் செய்துள்ளவர்கள்:-

ஸ்ரீ காஞ்சீ ப்ர. ப. அண்ணங்கராசார்யர் ஸ்வாமி ; கவியோகி சுத்தானந்த பாரதி ; பி. ஸ்ரீ. ஆசார்யா ; காப்டன் என். சேஷாத்திரிநாதன்: பி.ஆர் ராஜ சூடாமணி ; வை. மு. கோ. ; படங்கள்—ராகவன்

பதிப்பாசிர்யர் : வை. மு. ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்

உங்கள் பிரதிக்கு ஆர்டர் செய்தாயிற்ரு? தனிப்பிரதி அணு 6. தபால் மூலம் அணு 7. பார்த்திப வருடத்தில் மொத்தம் 6 புத்தகங்கள் வெளிவரும். ரூ. 2—4—0 முன்பணம் அனுப்புவோருக்குத் தபாற் செலவு இனம். காகிதக் கட்டுப்பாட்டினுல் குறைந்த பிரதிகளே வெளியிடுவதால் உடனே முந்துங்கள்.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL

Jaganmohini (June 1945) Regd. No. M. 2210.

குமாஸ்தாக்கள்

★ ராயல் இந்தியன் கடற்படையில் ரைட்டர்களுக்கும், (இந்தியன் தரைப்படை குமாஸ்தாக்கள் பகுதி உட்பட) இந்தியன் தரைப்படையிலும் ராயல் இந்தியன் ஆகாயப்படையிலும் குமாஸ்தாக்களுக்கும் உத்தியோகங்கள் காலியுள்ளன.

பெறுமதியுடைய பயிற்சி

இவ்வுத்தியோகங்கள் எதிலும் சரி, நீங்கள் பெறும் அனுபவஞானமும் பயிற்சியும் யுத்த பிற்காலம் இந்தியன் வர்த்தகத்துக்கு கட்டாயம் மிகவும் பயன் படும்.

நல்ல சம்பளம்
இலவச இடவசதி
இலவச சிகிச்சை
பூராச் சம்பளத்துடன் ரஜா
இலவச உணவு
இலவச உடைகள்

இந்த உத்தியோகங்களுக்குத் தகுதியுற என்னென்ன யோக்கியதாம்சங்கள் தேவையென்பது பற்றியும் மற்றபடி பூரா விவரங்களுக்கும் கீழ் வரைந்துள்ள ஆபீஸுகளில் உங்களுக்கு மிகவும் அருகிலுள்ள ஆபீஸுக்கு எழுதவும்.

மதராஸ்; புதுப்பேட்டை லேன்ஸ், மவுண்டுரோடு போஸ்டு.
பெங்களூர்: கப்பன் ரோடு. திருச்சிநாப்பள்ளி: மதுரை ரோடு
பெஜவாடா: பத்தர் ரோடு. வேலூர்: 15. ஆபிஸர்ஸ் லேன்ஸ்.
மைசூர்; காந்தி ஸ்கொயர்.

AAA 134